விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 09 புதன்கிழமை (25.08.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 249

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

## கொரோனாத் தொற்றால்
# மங்கள சமரவீர காலமானார்



*(கொழும்பு)* முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர நேற்றுக் காலமானார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று தனது 65ஆவது வயதில் காலமானார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

# கோவிட்டால் மேலும் 190 பேர் மரணம்

(கொழும்பு) நாட்டில் மேலும் 190 பேர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித் 15

# 4 இலட்சத்தை நெருங்கிய தொற்றாளர் எண்ணிக்கை
## நேற்றும் +4,446 பேர் பாதிப்பு

(கொழும்பு) நாட்டில் நேற்று மேலும் 4,446 பேருக்கு கொரோனாத் தொற்று 15

## கோவிட்டால் வடக்கில் 13 பேர் பலி
# யாழில் மட்டும் 9 பேர் உயிரிழப்பு

***(யாழ்ப்பாணம்)* கொரோனா வைரஸ் தொற்றால் வடக்கில் 13 பேர் உயிரிழந்துள்ளனர். அதில் யாழ்.மாவட்டத்தில் மட்டும் 9 கோவிட் இறப்புக்கள் பதிவாகியுள்ளது.**

***யாழ்ப்பாணத்தில் கொரோனாவால் ஒரே நாளில் பதிவான அதிக எண்ணிக்கையிலான உயிரிழப்புக்கள் இதுவாகும்.***

கொரோனாவால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த 6 பேரும் கொடிகாமத்தில் இருவரும் உயிரிழந்துள்ளனர்.

அவர்களில் ஒருவர் வவுனியாவைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த திருநெல்வேலியைச் சேர்ந்த 85 வயதுடைய ஒருவரும் கொடிகாமத்தைச் சேர்ந்த 47 வயதுடைய ஒருவரும் வவுனியாவைச் சேர்ந்த 66 வயதுடைய ஆண் ஒருவரும் கொக்குவிலைச் சேர்ந்த 82 வயதுடைய ஆண் ஒருவரும் கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த 69 15

### வாள்வெட்டில் மரணமான
## இளைஞனுக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணம் குருநகரில் வாள்வெட்டுத் தாக்குதலில் படுகாயமடைந்து போதனா மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவருக்கு கோவிட்-19 நோய்த் தொற்று உள்ளதாக 15

### தென்னிலங்கையில்
## 2 ரிச்டர் அளவில் நிலநடுக்கம்

(கொழும்பு) தென்னிலங்கையில் மிதமான நில அதிர்வு உணரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 15

### சங்கானையில் எழுமாற்றுப் பரிசோதனை
## பிரதேச செயலர், கிராம சேவகர் உட்பட 29 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்) யாழ்.சங்கானைப் பகுதியில் நேற்று நடத்தப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 29 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

இதன்படி பிரதேச செயலர், கிராம அலுவலர் ஒருவர் மற்றும் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர் உட்பட 29 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 15

## வடக்கில் 250 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்) வட மாகாணத்தில் நேற்று 250 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ் . போதனா 15

# வவுனியாவில் மேலும் 152 பேருக்கு கோவிட்

(வவுனியா) வவுனியாவில் மேலும் 152 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளது.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் மற்றும் 15

# பயணக் கட்டுப்பாடுகள் மேலும் கடுமையாக்கப்பட வேண்டும்
## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு) பயணக் கட்டுப்பாடுகள் 80 முதல் 90 சதவீதம் வரை மேலும் கடுமையாக்கப்பட வேண்டும். மேலும் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் சரியாக செயற்படுத்தப்பட வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் 15

### கோவிட்டின் உச்ச நிலையால்
## சுகாதாரப் பணியாளர்கள் அனைவரும் ஆபத்தில்

(கொழும்பு) தினமும் கோவிட்-19 நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் சுகாதாரப் பணியாளர்கள் அதிக ஆபத்தில் இருப்பதாக அரச குடும்பநல உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று கண்டியில் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வவுனியா புளியங்குளத்தில் கிராம சேவகருக்கு கொரோனா தொற்று

(வவுனியா)

வவுனியா புளியங்குளம் வடக்கு கிராமசேவகருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கிராமசேவகருக்கு காய்ச்சல் இருந்த நிலையில் புளியங்குளம் பிரதேச வைத்தியசாலையில் நேற்றையதினம் அன்டிஜன் பரிசோதனையினை முன்னெடுத்திருந்தார்.

இதன்போது அவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டதையடுத்து அவர் மற்றும் அவரது குடும்பத்தினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் மற்றும் அங்கு பணிபுரியும் சில உத்தியோகத்தர்களிற்கு கொரோனாத் தொற்று பீடித்துள்ளமை அண்மையில் உறுதிசெய்யப்பட்டிருந்ததுடன், கனகராயன்குளம் வடக்கு கிராம சேகவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

## புதுக்குடியிருப்பில் பிரபல வர்த்தகர் கொரோனாவால் மரணம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பில் பிரபல வர்த்தகர் ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு அரசோலைப் பிள்ளையார் புடைவையக உரிமையாளரான சிவப்பிரகாசம் சிறீதரன் என்பவரே கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

கடந்த சில நாட்களாக புதுக்குடியிருப்பில் கொரோனாப் பரவல் தீவிரம் பெற்றுள்ள நிலையில் குறித்த வர்த்தகர் தொற்றுக்குள்ளான நிலையில் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

உடல் நிலையில் தொடர்ந்தும் பாதிப்பு நீடித்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருக்கின்றார்.

அங்கும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம-03,281)

## அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் அடுத்தவாரம் அறிவிக்கப்படும்

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் அமைச்சரவை உபகுழு தயாரித்துள்ள அறிக்கை நிதி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே அறிக்கை தொடர்பில் நிதி அமைச்சு உள்ளிட்டவற்றின் மதிப்பீடுகளையும் பெற்று அடுத்த வாரம் அமைச்சரவையின் தீர்மானம் என்ன என்பதை நாட்டுக்கு வெளிப்படுத்துவோம் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ம-03)

## கொழும்பில் 12 வயது சிறுமி கொரோனாவால் பலி

(கொழும்பு)

கொழும்பு லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த ராஜகிரிய பகுதியைச் சேர்ந்த 12 வயது சிறுமி கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்தார்.

நாவல பகுதியில் உள்ள ஒரு தனியார் பாடசாலையில் தரம் 7 இல் கல்வி கற்கும் குறித்த சிறுமி மூச்சுத் திணறல் ஏற்பட்டதன் காரணமாக கொழும்பில் உள்ள குழந்தைகளுக்கான லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று உயிரிழந்தார்.

இதையடுத்து அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

கொரோனாத்தொற்றுக்காரணமாக உயிரிழந்த குறித்த 12 வயது சிறுமியின் தாய், வைரஸ் மேலும் பரவுவதை அனுமதிக்க வேண்டாம் என்று பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"கொரோனா என் குழந்தையை அழைத்துச் சென்றது. என் குழந்தைக்கு நடந்ததைப் போன்று வேறு எவருக்கும் நடந்து விடக்கூடாது. கொரோனாத் தொற்று வெற்றி பெற அனுமதிக்காதீர்கள்" எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-03)


### கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தின்
நிர்வாக உத்தியோகத்தர்
திருமதி நந்தினி நற்குணராஜா
அவர்களின் அன்புத் தாயார்

அமரர்
பத்மாவதி வில்வராஜா



அவர்கள் நேற்று (24.08.2021) செவ்வாய்க்கிழமை
இறையடி சேர்ந்த செய்தி கேட்டு நாமும்
துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (C-2575)

நலன்புரிச் சங்கம்
யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்



### மரண அறிவித்தல்



வல்லிபுரம் பத்மராசா

வளாக வீதி திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பத்மராசா நேற்று (24.08.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் விஜயாவின் அன்புக் கணவரும் பரமேஸ்வரி, பஞ்சநாதன் (கொக்குவில்), பவளராணி (பிரான்ஸ்), பாக்கியநாதன் (பேபி - பிரான்ஸ்), பராசக்தி (பாமினி - பிரான்ஸ்) மற்றும் காலஞ்சென்ற பவானிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் அன்புராஜ் (பிரான்ஸ்), அற்புதராணி, அம்பிகா, லோகரூபன், சியாமளா, டினேஸ் மற்றும் லோஜி ஆகியோரின் அன்புத் தந்தையும் வசீகரன், யோகராசா, நிசாந்தன் ஆகியோரின் மாமனாரும் சைலேசு, துனுசன், சர்வேஸ், திரிசாளி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.08.2021) புதன்கிழமை நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். (7806)

பொற்பதி வீதி,
கொக்குவில்.



### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி கோகிலவாணி நகுலேஸ்வரன்
அவர்களின் அன்புத் தந்தையார்
அமரர்
நவரத்தினம் பரமு
[இளைப்பாறிய தபாலதிபர்]



அவர்கள் நேற்று (24.08.2021)
செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (C-2578)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா / கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை



### 31ஆம் நாள் நினைவலைகள்

அமரர்
திருமதி பரமேஸ்வரி
யோகநாதன்



" ஊருக்கு நீ சித்திரம்தான்
உன் வீட்டில் சுவரில்லாச் சித்திரம் "

துயருறும் நண்பர்குழாம்
... நூலகம், வினோபா நகர், கச்சாய். (C-2577)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# டெல்டா மாறுபாட்டால் ஏற்படும் தற்போதைய அழிவு

# முழுமையாக தடுப்பூசி போடப்படும் வரை தொடரும்

## சுகாதார வல்லுநர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் டெல்டா மாறுபாடு தற்பொழுது ஆதிக்கம் செலுத்தி வருவதால் இரண்டாம் அலையின் போது பரவியிருந்த கொரோனாவின் அல்பா மாறுபாடு மெதுவாக குறைவடைந்து வருவதாக சுகாதார வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.**



குறிப்பாக கடந்த காலங்களில் 88 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டதில் 4 மாதிரிகள் மாத்திரமே அல்பா வகையாக கண்டறியப்பட்டுள்ளன.

டெல்டா இலங்கையில் மாத்திரமல்ல பல்வேறு நாடுகளில் தனது ஆதிக்கத்தை செலுத்தியுள்ளதாகவும் ஆகவே தான் பல்வேறு நாடுகள் மீண்டும் முடக்கத்தை அறிவித்துள்ளதாகவும் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில், அதிகாரபூர்வமற்ற முறையில் ஒரு நாளைக்கு சுமார் 6000 புதிய நோய்த்தொற்றுகள் கண்டறியப்பட்டு வருவதாகவும், எதிர்வரும் நாட்களில் இலங்கையில் இறப்பு எண்ணிக்கை ஒரு நாளைக்கு 200 ஐ தாண்டும் என்றும் மருத்துவர்கள் கணித்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவை தவறாகப் பயன்படுத்த வேண்டாம் என்றும் பரவலைத் தடுக்க வீடுகளுக்குள் இருக்குமாறும் மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தனி நபர்களிடம் இருந்து பெறப்படும் நன்கொடைகளில் இருந்தே தற்பொழுது அதிகளவிலான மருத்துவ வசதிகள் செய்யப்படுகின்றன.

டெல்டா மாறுபாட்டால் ஏற்படும் தற்போதைய அழிவு, மக்கள் தொகையில் பெரும் சதவீதத்தினர் முழுமையாக தடுப்பூசி போடப்படும் வரை தொடரும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், அதனால் தான் மருத்துவ அதிகாரிகள் தடுப்பூசிகளை சீக்கிரம் வழங்க முயற்சிப்பதாகவும் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்பொழுது 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வீடுகளுக்கே சென்று தடுப்பூசிகளை ஏற்றி வருகின்றனர். ஏனெனில் வைரஸால் பாதிக்கப்படுபவர்களில் பெரும்பாலானவர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# தமிழருக்காக எழுதிய கடிதங்களால்

## பதவியிழந்த மங்கள- இரங்கல் செய்தியில் சுமந்திரன்



(கொழும்பு)

தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்தவர் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர என எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார். தனது முகப்புத்தகத்தில் பதிவிட்ட இரங்கல் செய்தியில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மங்கள சமரவீர அவருடைய அரசியல் வாழ்க்கையில் ஒரு போதும் பாகுபாட்டைக் காட்டியதில்லை. அவர் தமிழ் மக்களுக்கு சரியான விதத்தில் நீதி எட்டப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டைக் கொண்டவர். அவர் தாராளவாத சிந்தனைகளை பின் பற்றியவர். யுத்த காலத்தை எடுத்துக் கொண்டால் ,2005 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகிய போது இவர் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

ஆனால் போர் முடிவுக்கு வருகின்ற தருவாயில் நீங்கள் போரை முடிவுக்கு கொண்டு வருவது அவசியமாக இருந்தாலும் நீங்கள் அதனை கையாளும் முறையில் எனக்கு எந்தவித உடன்பாடும் இல்லை. என ஜனாதிபதிக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியிருந்தார்.இதன் காரணமாக அவருடைய அமைச்சுப் பதவியை இழந்திருந்தார். இவ்வாறாக பற்பல சந்தர்ப்பங்களில் அவர் தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்த ஒருவர் என்பதை நாம் கண்டு கொண்டுள்ளோம். என சுமந்திரன் தெரிவித்தார். (நி)

# சர்வதேச ஊடகத்தின் கவனத்தை ஈர்த்த 'காட்போட்' சவப்பெட்டி



(கொழும்பு)

தெஹிவளை கல்கிசை மாநகர சபையால் அறிமுகப்படுத்தப்பட்ட 'காட்போட்'சவப் பெட்டிகள் சர்வதேச ஊடகங்களின் கவனத்தை ஈர்த்துள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கொவிட் இறப்புகள் தொடர்ந்து அதிகரித்து வருவதால், இந்த புதிய கண்டுபிடிப்பு முயற்சியை தாம் தொடங்கியதாக மாநகரசபையின் முதல்வர் பிரியந்த சகபந்து தெரிவித்தார்.

இந்த காட்போட் சவப்பெட்டி தற்போது ரூ .4,500 க்கு விற்பனை செய்யப்படுகிறது. இலங்கையில் மலிவான மரப் பெட்டியிலான சவப்பெட்டி ரூ .25,000 முதல் ரூ .30,000 வரை விற்கப்படுகிறது.

இந்த காட்போட்டிலான சவப்பெட்டி மறுசுழற்சி செய்யப்படும் எனவும் 100 கிலோகிராம் எடுத்துச் செல்ல முடியும் என்றும் ரொய்ட்டர்ஸிடம் தெரிவித்தார்.(நி-5)

# தான்தோன்றித்தனமாக செயற்பட்டதால்

# பாரிய நெருக்கடிக்குள் நாடு

(கொழும்பு)

நாட்டில் எழுந்துள்ள அடிப்படை பிரச்சினைகளை மூடி மறைக்கவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் பங்காளி கட்சி தலைவர்களை விமர்சித்து புதிய நாடகத்தை அரங்கேற்றியுள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொவிட் வைரஸ் தாக்கத்தினால் பதிவான மரணங்கள் அனைத்திற்கும் அரசாங்கம் பொறுப்பு கூற வேண்டும். சுகாதார தரப்பினரது ஆலோசனைகளுக்கு முன்னுரிமை வழங்காமல் ஜனாதிபதி தான்தோன்றித்தனமாக செயற்பட்டதால் நாடு பாரிய நெருக்கடியை எதிர்க் கொண்டுள்ளது.

இடுகம கொவிட் நிவாரண நிதியத்தின் மீது நம்பிக்கையில்லை. கொவிட் முதலாம் அலையில் இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறு தரப்பினர் நிதியத்திற்கு உதவி புரிந்தார்கள். இறுதியில் அந்நிதியத்திற்கு கிடைக்கப் பெற்ற நிதிக்கு என்ன நடந்தது என்பதை அரசாங்கம் தெளிவுப்படுத்தவில்லை.

ராஜபக்ஷர்கள் மீது நம்பிக்கை இல்லாத காரணத்தினாலேயே சுதந்திர கட்சியினர் இடுகம நிதியத்திற்கு தங்களின் மாத சம்பளத்தை வழங்காமல், சுதந்திர கட்சி மட்டத்தில் நிதியத்தை உருவாக்கியுள்ளார்கள்.

ஆகவே ஐக்கிய மக்கள் சக்தி " எதிர்க்கட்சியின் மூச்சு" என்ற நிதியத்தின் ஊடாக நிதி திரட்டி வைத்தியசாலைகளுக்கு தேவையான மருத்துவ உபகரணங்களை வழங்க தீர்மானித்துள்ளோம்.

சுகாதாரம், பொருளாதாரம் என பலதரப்பட்ட பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளன. இவ்விடயங்களை மூடி மறைப்பதற்காக பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் பங்காளி கட்சி தலைவர்களை விமர்சித்து புதிய நாடகத்தை அரங்கேற்றியுள்ளார் என அவர் தெரிவித்தார். (நி-5)

# தடுப்பூசி அட்டைக்கு எதிராக சிங்கள ராவய வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

கட்டாய தடுப்பூசிகள் மற்றும் தடுப்பூசி போடப்படாத நபர்கள் பொது இடங்களுக்கு செல்வதைத் தடுக்கும் விதிமுறைகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யபோவதாக சிங்கள ...ப அமைப்பு அறிவித்துள்ளது.

கொரோனா தடுப்பூசி அட்டையை கட்டாயப்படுத்தியுள்ள அரசாங்கம், பொது இடங்களுக்குச் செல்லும் போது, அந்த அட்டையை எடுத்துச் செல்லவேண்டும் எனவும் இந்த நடைமுறை செப்டெம்பர் 15ஆம் திகதி முதல் அமுலில் இருக்கும் என அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது டெஸ்டில் மார்க்வுட் விலகல்



இந்தியாவுக்கு எதிரான 3வது டெஸ்ட் போட்டியிலிருந்து இங்கிலாந்து நட்சத்திர பந்து வீச்சாளர் மார்க்வுட் விலகியுள்ளார்.

இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

முதல் டெஸ்ட் மழை காரணமாக டிராவில் முடிந்த நிலையில், லார்ட்ஸில் நடந்த 2வது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி அபார வெற்றிப் பெற்றது.

இதன் மூலம் 1-0 என்ற வெற்றி கணக்கில் இந்திய அணி முன்னிலையில் உள்ளது.இரு அணிகள் மோதும் 3வது டெஸ்ட் போட்டி இன்று லீட்ஸ் மைதானத்தில் தொடங்கவுள்ளது.

இந்நிலையில், இங்கிலாந்து பந்து வீச்சாளர் மார்க் வுட், வலது தோள்பட்டையில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டில் இருந்து விலகியுள்ளார் என இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம்அறிவித்துள்ளது.(4)

# ஆப்கான்- பாகிஸ்தான் ஒரு நாள் தொடர் ஒத்திவைப்பு



பாகிஸ்தானுக்கு எதிரான ஆப்கானிஸ்தானின் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இரு அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் செப்டெம்பர் 3 ஆம் திகதி இலங்கையில் ஆரம்பமாகவிருந்தது.

எனினும் திங்களன்று பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வாரியங்களுக்கு இடையிலான பரஸ்பர பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் தொடர் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

ஆடுகள சிக்கல்கள் மற்றும் மோதலால் பாதிக்கப்பட்ட தேசத்தை தலிபான் கைப்பற்றியதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தான் வீரர்களின் மன ஆரோக்கியத்தை கருத்திற் கொண்டு இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் (ACB) தலைமை நிர்வாக அதிகாரி ஹமீத் ஷின்வாரி ESPN cricinfo விற்கு இந்தத் தொடரை பாகிஸ்தானுக்கு மாற்ற முயற்சித்ததை உறுதிப்படுத்தினார்.

ஆனால் இறுதியில் ஆப்கானிஸ்தானைச் சுற்றியுள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தொடரை ஒத்திவைக்க முடிவு செய்யப்பட்டதாக கூறினார்.

தலிபான்கள் ஆப்கானை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததைத் தொடர்ந்து காபூலில் இருந்து வணிக விமானங்கள் எதுவும் புறப்படவில்லை.

மேலும், இலங்கையின் கொவிட்-19 நிலைமைகள் மற்றும் தனிமைப்படுத்தல் உத்தரவு காரணமாக தொடர் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (4)



# செர்ரி-ஏ கால்பந்து லீக்; மிலான் வெற்றி


செர்ரி- ஏ கால்பந்து லீக் தொடரில் நடைபெற்ற முதல் கட்ட லீக் போட்டியில், ஏ.சி. மிலான் அணி வெற்றிபெற்றுள்ளது. லூய்கி ஃபெரொரிஸ் விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில், ஏ.சி. மிலான் அணியும் செம்ப்டோரியா அணியும் மோதின.

பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், ஏ.சி. மிலான் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இதன்போது ஏ.சி. மிலான் அணி சார்பில், பிராஹிம் டயஸ் போட்டியின் 9ஆவது நிமிடத்தில் அணிக்காக வெற்றி கோலை புகுத்தினார். (4)




துஷியா




நர்மதா




டயானி





லோகன்




தர்ஷிகன்




சுதன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவிட் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்போரை தகனம் செய்ய இலவச சவப்பெட்டிகள்



(கொழும்பு)

அத்தனகல்ல பிரதேச சபை இலவசமாக சவப் பெட்டிகளை வழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

கொவிட் தொற்றுக்கு இலக்காகி உயிரிழப்பவர்களின் சடலங்களை தகனம் செய்வதற்கு இலவசமாக சவப்பெட்டிகள் வழங்குவதாக அத்தனகல்ல பிரதேச சபையின் தலைவர் பிரியந்த புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொவிட் காரணமாக உயிரிழப்போரின் குடும்ப உறுப்பினர்கள் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர். அவ்வாறு பாதிக்கப்படுவோருக்கு உதவும் நோக்கில் சவப்பெட்டிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

குறிப்பாக குறைந்த வருமானம் ஈட்டும் குடும்ப உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தால் அந்த குடும்பத்தினால் சவப்பெட்டி ஒன்றைக்கூட கொள்வனவு செய்ய முடியாத நிலைமை காணப்படுகிறது.

இவ்வாறான ஓர் பின்னணியில் கொவிட் - 19 காரணமாக மரணிப்போரின் சடலங்களை தகனம் செய்ய சவப்பெட்டிகளை இலவசமாக வழங்கவும், இறுதிக் கிரியைகளுக்கு கட்டணம் அறவீடு செய்யாதிருக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொடையாளர்கள் சிலர் பலகைகளை வழங்கி வரும் நிலையில் பிரதேச சபையின் பணியாளர்கள் சவப்பெட்டிகளை தயாரித்து வருகின்றனர் என குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# கொவிட் தொற்றிலிருந்து மீள சத்தான உணவு அவசியம்



(கொழும்பு)

கொவிட் தொற்றில் இருந்து மீள்வதற்கு தினசரி ஊட்டச்சத்துள்ள உணவை உட்கொள்வது அவசியம் என்று சுகாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட பேராசிரியர் ரணில் ஜயவர்த்தன இதனை தெரிவித்தார்.

கொவிட் வைரஸால் பாதிக்கப்பட்ட மக்களும் சீரான உணவைப் பெறுவது அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்காக பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளுக்கு மேலதிகமாக தினசரி ஊட்டச்சத்துள்ள உணவை உட்கொள்வது அவசியம்.

கொவிட் வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு நாளைக்கு இரண்டு லீற்றருக்கு மேல் தண்ணீர் குடிக்க வேண்டும். இல்லையென்றால், அந்த நோயாளிகளுக்கு நீரிழப்பு ஏற்படும் அபாயம் உள்ளதென அவர் தெரிவித்துள்ளார்.

கொவிட் தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு மருந்தை போன்று உணவும் மிக முக்கிய விடயமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# பொருளாதார மத்திய நிலையங்கள் திறப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல பொருளாதார மத்திய நிலையங்களும் நேற்று திறக்கப்பட்டன.

அதேநேரம், மத்திய நிலையங்கள் அனைத்தும் இன்றும் திறக்கப்படுமென விவசாய இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், பொருளாதார மத்திய நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தன.

இந்த நிலையில், மொத்த விற்பனை நடவடிக்கைகளுக்காக மாத்திரம் பொருளாதார வர்த்தக நிலையங்கள் மீள திறக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982இந்து நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 32 ½செவ் 7 சூரி2 இல்
உயரம்:5'3"
தகைமை/தொழில்: மின்சார சபை பாவனையாளர் ஒழுங்கிணைப்பாளர்
எதிர்பார்ப்பு:சாதாரண படித்தபெண், மணமகன் விவாகரத்தானவர்
தொ.இ: B/12034

பிறப்பு:1987 இந்து நட்சத்திரம்: பரணி
கி.பா: 19 செவ்.சூரி5 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: மாநகரசபை வாகனம் திருத்துநர்
எதிர்பார்ப்பு:படித்தபெண்
தொ.இ: B/12035

பிறப்பு:1987இந்து நட்சத்திரம்:ஆயிலியம்
கி.பா:8 ½ செவ் 9 சூரி10 இல்
உயரம்:5'7"
தகைமை/தொழில்: B.Sc, இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்
எதிர்பார்ப்பு:தகுந்த அரச, தனியார் தொழில்
தொ.இ: B/12036

பிறப்பு:1984 இந்து நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 39 ¼செவ் 1சூரி11 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:HNDE, Work-LOLC
எதிர்பார்ப்பு:படித்தவேலைபார்க்கும்பெண்
தொ.இ: B/12039

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 இந்து நட்சத்திரம்: ரேவதி
கி.பா: -செவ் 7சூரி12 இல்
உயரம்:5'5"
தகைமை/தொழில்:அரசவங்கி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:அரசஅல்லதுதனியார்துறை
தொ.இ:G/12037

பிறப்பு:1993 இந்து நட்சத்திரம்:பூரம்
கி.பா:55செவ் 4 சூரி3 இல்
உயரம்:5'5"
தகைமை/தொழில்: அரசதாதி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:உள்நாடு.வெளிநாடு -கனடா
தொ.இ:G/12042

பிறப்பு:1997இந்து நட்சத்திரம்: பரணி
கி.பா:41 ¾ செவ்10 சூரி 8இல்
உயரம்:5'4"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு:லண்டன், கனடா வெளிநாடு மட்டும்
தொ.இ:G/12043

பிறப்பு: 1998இந்து
நட்சத்திரம்:திருவோணம்
கி.பா:84 செவ் 8 சூரி7 இல்
உயரம்:158cm
தகைமை/தொழில்: பல்கலைக்கழக மாணவி (Animal Science)
எதிர்பார்ப்பு:Doctor, Engineer, Gov Job
தொ.இ:G/12045

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# மனிதநேயத்திற்கு மதிப்பளிக்கும் யுகபுருஷர் மங்கள- சஜித் அனுதாபம்



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் மறைவிற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் தனது முகநூலில் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தி வருமாறு,

"மனித நேயத்திற்கு கௌரவமளித்து மனச்சாட்சியின் அடிப்படையில் தான் நம்புகின்ற கோட்பாட்டுடன் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட யுகபுருஷரான எமது நண்பர் மங்கள சமரவீர அவர்களே உங்களின் ஆத்மா சாந்தியடையட்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்."

கொரோனா தொற்றுக்குள்ளான முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர நேற்று மரணமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# சுகாதாரத் துறையினை கட்டியெழுப்புவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி

(கொழும்பு)

நாட்டின் சுகாதாரத்துறையினை கட்டியெழுப்புவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி, 50 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியினை வழங்கியுள்ளது.

அவற்றில் 37.5 மில்லியன் அமெரிக்க டொலரை கடனாகவும், 12.5 மில்லியன் அமெரிக்க டொலரை அன்பளிப்பாகவும் ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தபால் சேவைகள் முன்னெடுப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தபால் சேவைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாதாந்த சிகிச்சைகள் ஊடாக மருந்துகளை பெற்றுக்கொள்வோருக்கான சேவை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதி தபால்மா அதிபர் துசித ஹ°லங்கமுவ தெரிவித்தார்.

தபால்மா அதிபரின் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய தபால் பரிமாற்றகத்திற்கு கிடைத்துள்ள பொதிகள் உரியவர்களுக்கு ஓரிரு நாட்களில் கிடைக்கும் வண்ணம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பிரதி தபால்மா அதிபர் குறிப்பிட்டார்.

இதனிடையே குறைந்தபட்ச ஆளணியுடன் குறைந்த நாட்களுக்குள் மருந்து விநியோகத்தை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், சாதாரண தபால் சேவைகள் முன்னெடுக்கப்படமாட்டாது என அவர் சுட்டிக்காட்டினார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருதிக்கு தட்டுப்பாடு

# சிறிய முகாம்களை ஒழுங்கு செய்து குருதித் தானம் செய்யுங்கள்

## யாழ்.போதனா இரத்த வங்கி பிரிவு

(யாழ்ப்பாணம்)

**ஊரடங்குச் சட்டம் அமுலிலிருப்பதால் நடக்க வேண்டிய இரத்ததான முகாம்கள் இரத்தாகிவிட்டன. இதனால், இரத்த வங்கியின் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனைக் கருத்திற் கொண்டு குருதிக் கொடையாளர்கள் இரத்ததானம் வழுங்க முன்வர வேண்டும் என யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

பொது முடக்க காலத்திலும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வழமை போன்று நடைபெறுகின்ற சத்திர சிகிச்சைகளும், ஏனைய சிகிச்சைகளும் நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றன.

அதேநேரம் விபத்துக்கள் காரணமாகவும் நோயாளர்கள் சிகிச்சைக்காக வருகின்றார்கள்.

எல்லோருக்கும் பாரபட்சமின்றிச் சிகிச்சை அளிக்க வேண்டியது வைத்தியசாலைகளின் பொறுப்பாகும். இந்தச் சிகிச்சைகள் இரத்த வங்கியிலேயே தங்கியுள்ளன.

நீங்கள் தொடர்ச்சியாக வழங்கி வரும் ஒத்துழைப்பினாலேயே சிறந்த குருதிமாற்றுப் பிரயோகச் சேவையை நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

ஆகவே, தற்போது ஏற்பட்டுள்ள இந்த இக்கட்டான நிலைமையைக் கருத்திற் கொண்டு அதிகளவில் ஒன்றுசேராது சிறிய சிறிய முகாம்களை ஒழுங்கு செய்தால் அதாவது 10- 15 குருதிக் கொடையாளர்கள் இரத்ததானம் செய்வதற்கு ஆயத்தமாக இருந்தால் நாம் குறிப்பிட்ட இடத்திற்கு வருகை தந்து குருதியைச் சேகரிக்கும் பணியை மேற்கொள்ளலாம் எனவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்தவங்கிப் பிரிவினர் மேலும் குறிப்பிட்டனர். (4-7-18)




## ஓம்கார வேலவனை ஓம் T.V யில் தரிசித்தேன்

கொரோனாவின் தாக்கத்தால்-நல்லூர்
கோவிலுக்கு செல்ல முடியவில்லை.
கொவிட்-19 இன் காரணமாக முருகனும்
வெளிவீதி வலம் வரவில்லை-அதனால்
ஓம்கார வேலவனை ஓம் TV யில் தரிசித்தேன்.
கலியுக காலத் தலைவனே-எம்
கந்தன் முருகனே-உன்
புகழ் பாடி வந்தோம்-உந்தன்
கதைகள் கூறி நின்றோம்-இன்னும்
ஏன் பாராமுகமாக இருக்கின்றாய்-இக்
கொடிய நோயை அழித்து-உந்தன் அழகான
காட்சி தருவாய் ஐயா!
சண்முகா உன்னை தேரடியில் காணும் நாள்
இனிதே வாராதோ!

நல்லைக்குகன்

## கரவெட்டியில் 16 பேருக்கு தொற்று

(கரணவாய்)

கரவெட்டி சுகாதார வைத் திய அதிகாரி பிரிவினரால் நேற்று முன்தினம் மேற்கொள் ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனை யில் 16 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு ள்ளது.

இதில் நெல்லியடி பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் 6 பேருக்கும், அல்வாய் பொதுச் சுகாதார பரிசோத கர் பிரிவில் 6 பேருக்கும், உடுப்பிட்டி பொதுச் சுகாதார பிரிவில்வல்வெட்டித் துறை நகரசபையில் வருமான பரிசோதகராக கடமையாற்றும் உத்தியோகத்தர் உட்பட 4 பேருக் கும் என கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 16 பேரு க்கு கொரோனா தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது. (4-7-60)



இலங்கைக்கு வருகை தந்த ஜேர்மன் நாட்டை வசிப்பிடமாகக் கொண்ட வணபிதா அல்பிரட் மணிமாறன் வடமாகாண பொலிஸ்மா அதிபரை சந்தித்து கலந்துரையாடினார். இதன் போது வடமாகாணத்தின் தற்போதைய நிலவரம் தொடர்பாகவும், கொரோனா தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரை யாடப்பட்டது. (படம்:-ஜோசப்நயன்)

## அருள் தா கந்தா

வடிவேலா வடிவேலா முருகவேலா
மயில் மீது ஏறிவரும் கந்த வேலா
பழனியிலே ஆண்டியாய் நின்ற வேலா
பம்பரமாய் உலகை வலம் வந்த வேலா
கொடிய சூரனை கொன்ற வேலா
சேவலும் மயிலுமாய் அமர்ந்த வேலா
வேலினால் துன்பம் களையும் வேலா
வேண்டுகின்றோம் உம்மை குமரவேலா
வந்தருள் தந்திடுவாய் அழகு வேலா

ந.நாகேந்திரம்
மாவை கலட்டி

# கொவிட் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் உள்ளூராட்சி மன்றங்கள் பங்கெடுக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் உள்ளூராட்சி மன்றங்களும் பங்கெடுக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் யோ.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சியின் கொரோனா நிலவரம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், சுகாதார நடவடிக்கைகளைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு உள்ளூராட்சி மன்றங்களின் பிரதான கடமைகளில் ஒன்று. தற்போது சாவகச்சேரியில் கொரோனா உக்கிரமடைந்துள்ளது.

இதற்கு சாவகச்சேரி நகர சபை மற்றும் நகரசபையின் சுகாதாரக் குழு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது.

கொரோனா வீட்டுக் கதவைத் தட்டும் நிலை ஏற்பட்டு விட்டது. இந்நிலையில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு மிக அவசியம். அதனை நகரசபை மற்றும் நகரசபையின் சுகாதாரக் குழு முன்னெடுக்க வேண்டும்.

கொழும்பில் ஊரடங்கு அமுல்படுத்த முன்னரே மக்கள் தாமாக வீடுகளுக்குள் முடங்கினர். ஆனால் நிலைமை தீவிரமான போதிலும் மக்கள் அதனை உணராமல் செயற்பட்டு வருகின்றனர்.

கொரோனா எம்மை பீடிக்கும் வரை நாம் அக்கறையற்றவர்களாக ஓடித் திரிகின்றோம் என மேலும் அவர் தெரிவித்தார். (4-7-30)

## முருகா உனைக் காண...

வள்ளி தெய்வானை சகிதம்
உலா வரும் உனை காண
ஆயிரம் விழிகள் போதாது
அந் நாளைக் காண
எத்தனை தவம் இருந்தாலும்
இம் முறை அனுமதி இல்லையே
இந்நிலையில் எதுகை, மோனை
கலந்து எப்படி கவியெழுத?

கரிகாலன்
ஊரெழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

25.08.2021
ஆவணி,09 புதன்கிழமை
திருதியை பிற்பகல் 5.57 மணிவரை
உத்தரட்டாதி முன்னிரவு 11.10 மணிவரை
சுபநேரம் 4.35-6.05 மணிவரை
இராகுகாலம் 12.05- 1.35 மணிவரை
சந்திராஷ்டமம்-மகம், பூரம்
சங்கடஹர கணபதி விரதம்
வளவன்


மேஷம்

குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.


ரிஷபம்

இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வீட்டை அலங்கரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பொதுவாழ்வில் புகழ் கூடும், போசன சுகமுண்டு.


மிதுனம்

தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.


கடகம்

முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு, புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


சிம்மம்

சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.


கன்னி

பொறுமையால் பெருமைகள் சேரும் நாள், விரும்பிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.


துலாம்

தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பொதுவாழ்வில் புகழ்கூடும், போசன சுகமுண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், காரிய அனுகூலமுண்டு.


விருச்சிகம்

ஒளிமயமான எதிர்காலம் அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


தனுசு

உறவினர்களிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.


மகரம்

விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், வழிபாடு சிறப்பினைத் தரும், போசன சுகமுண்டு.


கும்பம்

குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், எதிர்பார்ப்புகள் எளிதில் ஈடேறும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.


மீனம்

நீங்கள் எதிர்பார்த்த காரியமொன்று நடைபெறுவதில் தாமதம் ஏற்படலாம், நிதானத்தோடு செயற்படவேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகள் ஏற்படலாம்.

ஊதாரி வருங்காலப் பிச்சைக்காரன்
கஞ்சன் நிரந்தரப் பிச்சைக்காரன்

# தொற்றுக்குள்ளாகும் கர்ப்பிணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு



(கொழும்பு)

கொரோனாத் தொற்று நோயால் பாதிக்கப்படும் கர்ப்பிணித் தாய்மார்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருகின்றது என குடும்ப சுகாதார சேவைகள் பணியகத்தின் இயக்குநர் வைத்தியர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதுவரை 27 கர்ப்பிணி தாய்மார் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்துள்ளதுடன் 850 கர்ப்பிணிதாய்மார் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

# 180 நாட்களுக்கு ஒரே தடவையில் விசா இலங்கையில் புதிய நடைமுறை

(கொழும்பு)

இலத்திரனியல் சுற்றுலா அனுமதி மூலம் வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு 180 நாட்களுக்கு ஒரே தடவையில் விசா வழங்கும் நடைமுறையை இலங்கையில் அமுல்படுத்துவது தொடர்பில் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் "இணையவழி இலத்திரனியல் சுற்றுலா விசா அனுமதிப்பத்திரம் வழங்கும் முறைமையின் (ETA) மூலம் சுற்றுலா விசா விண்ணப்பிக்கும் செயன்முறைக்கு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் "இலங்கை சுற்றுலா கைத்தொலைபேசி செயலி (Mobile App)" இனைப் பயன்படுத்தி இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு 180 நாட்கள் வரை செல்லுபடியாகும் சுற்றுலா விசா அனுமதிப் பத்திரத்தை வழங்கும் குறித்த நடைமுறை இலங்கையில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கடந்த 2021.01.04 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கீழ்வரும் வகையில் விசா கட்டணங்களை அறவிட்டு குறித்த சுற்றுலா விசா அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை உடன்பாடு தெரிவித்துள்ளது. (நி-5)

# வாராந்தம் 3 இலட்சம் லீற்றர் ஒட்சிசனை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

தீவிர நிலைமையிலுள்ள கொரோனா நோயாளர்களுக்கு திரவ மருத்துவ ஒட்சிசன் வழங்குவதை உறுதிப்படுத்தும் வகையில் 3 இலட்சம் லீற்றர் ஒட்சிசனை வாராந்தம் இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அதன்படி நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சமர்ப்பித்த யோசனைக்கே அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது பரவிவரும் திரிபடைந்த வைரஸ் காரணமாக ஒட்சிசன் தேவைப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால், போதுமானளவு ஒட்சிசனை நாட்டில் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு இயலுமான வகையில் வாராந்தம் 3 இலட்சம் லீற்றர் ஒட்சிசனை இறக்குமதி செய்வதற்காக யோசனை முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# நீதிமன்றில் ஆஜராகாத சந்தேக நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டாம்

## நீதிச்சேவை ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

நீதிமன்றத்தில் ஆஜராகாத பிரதிவாதிகள் அல்லது சந்தேக நபர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டாம் என நீதிச்சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளமையால், இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான பிரதிவாதிகள் அல்லது சந்தேக நபர்களுக்கு எதிராக பிடியாணை உள்ளிட்ட வலுக்கட்டாயமான வகையிலான கட்டளைகளைப் பிறப்பிக்க வேண்டாம் என நீதிச்சேவை ஆணைக்குழு சுற்றுநிருபத்தினூடாக நீதிபதிகளுக்கு அறிவித்துள்ளது.

நாட்டின் தற்போதைய நிலையின் கீழ், நீதிமன்ற செயற்பாடுகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுகாதார வழிகாட்டல்களுக்கமைய, நீதிமன்றச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகவும் நீதிச்சேவை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது அத்தியாவசிய வழக்குகள் மாத்திரமே விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதாகவும், ஏனைய வழக்குகள் அறிவித்தல்களினூடாக ஒத்திவைக்கப்படுவதாகவும் ஆணைக்குழு மேலும் அறிவித்துள்ளது.

அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம், நீதிமன்ற வரையறைக்குட்பட்டு பணியாளர்களை சேவைக்கு அழைக்குமாறும் நீதிபதிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானில் அமெரிக்க படை விலகல் குறித்து ஆய்வு செய்ய தேவையில்லை

## அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ்

(சிங்கப்பூர்)

**ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கர்களையும், தலிபான் களின் தாக்குதல் அபாயத்தில் உள்ள அந்நாட்டு மக்களையும் வெளியேற்றுவதில்தான் கவனம் செலுத்த வேண்டும் என அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் தெரிவித்தார்.**



ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா வெளியேறியதன் நடந்த தவறு என்ன என்ற கேள்விகளால் நிலைமையை திசைதிருப்பக் கூடாது எனவும் அவர் தெரிவித்தார்.

சிங்கப்பூருக்கு விஜயம் மேற் கொண்ட கமலா ஹாரிஸ் செய் தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

ஆப்கானில் அமெரிக்க படை விலகலால் என்ன நடந்தது, என்ன நடந்திருக்க வேண்டும் என்பது குறித்து ஆய்வு செய்ய வேண்டிய கேள்விக்கு இடமி ல்லை.

அங்கிருந்து அமெரிக்க குடி மக்களையும், எங்களுடன் இணைந்து பணியாற்றிய ஆப் கான் மக்களையும் பாதுகாப் பாக வெளியேற்றுவது குறித்து தான் அமெரிக்கா கவனம் செலு த்த வேண்டும் என்றார்.

அதைத் தொடர்ந்து, சிங்கப் பூரில் உள்ள சாங்கி கடற்படைத் தளத் தில் உள்ள அமெரிக்க போர்க் கப்பல் வீரர்களை சந்தித்துப் பேசிய கமலா ஹாரிஸ், ஆப் கானில் சிக்கலான, சவாலான சூழ்நிலையிலும் அமெரிக்கர் களை வெளியேற்றுவதில் திறம் பட செயற்பட்ட அமெரிக்க வீரர் கள், தூதரக அதிகாரிகளைப் பாராட்டினார்.

மேலும் தென் சீனக் கடலில் சீனாவின் அத்துமீறிய ஊடு ருவலுக்கு கடுமையான கண்ட னத்தை வெளியிட்ட கமலா ஹாரிஸ் பீஜிங்கின் முன்னேற்ற ங்களுக்கு எதிராக பிராந்திய த்தில் தனது நட்பு நாடுகளுக்கு எதிராக அமெரிக்கா ஆதரவளி க்கும் என்றும் உறுதியளித்தி ருந்தார்.

பீஜிங் தென் சீனக்கடலின் பெரும்பகுதிக்கு கட்டாயப்படுத்தி அச்சுறுத்துகின்றது மற்றும் உரிமை கோருகிறது என்பதை நாங்கள் அறிவோம்.பீஜிங்கின் இந் நடவடிக்கைகள் விதிகள் அடிப்படையிலான ஒழுங்கை குறை மதிப்பிற்கு உட்படுத்து கின்றன. மற்ற நாடுகளின் இறையாண்மையை அச்சுறு த்துவதாகவும் கூறினார். (7-4)

# அமெரிக்காவின் உயரமான மனிதர் வோவ்கோவின்ஸ்கி காலமானார்



(வோஷிங்டன்)

2010 இல் கின்னஸ் உலக சாதனை மூலம் அமெரிக்கா வில் உயரமான மனிதராக முடிசூட்டப்பட்ட இகோர் வோவ் கோவின்ஸ்கி, கடந்த வெள்ளிக் கிழமை தனது 38 ஆவது வய தில் காலமானார் என்று அவரது தாயார் ஸ்வெட்லானா வோவ் கோவின்ஸ்கா தெரிவித்துள்ளார்.

கின்னஸின் கூற்றுப்படி, வோவ்கோவின்ஸ்கி 7 அடி, 8.33 அங்குல உயரம் உடைய வர்.

வோவ்கோவின்ஸ்கி இரு தய நோயால் பாதிக்கப்பட்டு உயி ரிழந்ததாக அவரது தாயார் தெரிவித்துள்ளார். (7-4)

# ஏதென்ஸ் அருகே மீண்டும் பரவிய காட்டுத் தீ



(ஏதென்ஸ்)

கிரேக்க தலைநகர் ஏதென் ஸின் மேற்கு பகுதியில் உள்ள இரண்டு கிராமங்களில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மீண்டும் காட்டுத் தீ பரவல் ஏற்பட்டதை அடுத்து அங்கி ருந்து மக்கள் வெளியேற்றப்பட் டனர்.

கடந்த வாரம் காட்டுத் தீயால் அழிக்கப்பட்ட ஒரு காட்டுப் பகுதியில் புதிதாக மீண்டும் தீ பரவியது.

13 ஹெலிகொப்டர்கள் மற் றும் 08 தண்ணீர் விசிறும் விமானங்களுடன் ஏதென்ஸின் மேற்கே பரவிய காட்டுத்தீயை கட்டுப்படுத்தும் பணியில் தீய ணைப்பு வீரர்கள் நேற்று முன் தினம் ஈடுபட்டிருந்ததாக தீய ணைப்பு படை அதிகாரி தெரி வித்தார்.

கிரேக்க தலைநகரிலிருந்து சுமார் 50 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள வில்லியா மற்றும்ப்ரோஃபிடிஸ் இலியாஸ் கிராமங்களில் கடும் காற்றைத் தொடர்ந்து நேற்று முன்தினம் காட்டுத் தீ பற்றியெரியத் தொடங் கியது. இதனையடுத்து அங்கி ருந்து மக்களை உடனடியாக வெளியேறுமாறு பாதுகாப்பு அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

ஓகஸ்ட் தொடக்கத்தில் இரு ந்து கிரேக்கத்தில் 500 இற்கும் மேற்பட்ட பகுதிகளில் காட்டுத்தீ அழிவுகளை ஏற்படுத்தியது.

ஆயிரக்கணக்கான மக்கள் தங்களது இருப்பிடங்களில் இரு ந்து வெளியேற்றப்பட்டனர்.(7-4)

**உலகளவில் கொரோனா**

உயிரிழப்பு :-4 455 242

தொற்று :-213 385 056

(நேற்றைய நிலைவரம்)

# ஐ.நா.அகதிகள் தூதரகத்தின் முன் போராடிய ஆப்கான் அகதிகள்

(டில்லி)

டில்லியில் உள்ள அகதிக ளுக்கான ஐ.நா. தூதரகத்தின் முன்பாக நூற்றுக்கணக்கான ஆப்கான் அகதிகள் நேற்று முன் தினம் ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட னர்.

'எங்களுக்கு எதிர்காலம் வேண்டும், நீதி வேண்டும், இனி மேலும் தாமதிக்கக் கூடாது' போன்ற கோஷங்களை எழுப்பினர்.

சிலர் 'ஜெனீவாவில் உள்ள ஐ.நா. அமைப்பு ஆப்கான் அக திகளுக்கு உதவ வேண்டும். அனைத்து ஆப்கான் அகதிகளுக் கும் குடியுரிமை ஆவணங்கள் வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்' என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆப்கானில் இருந்து அகதி யாக வெளியேறுபவர்களின் எதிர்கால வாழ்க்கை சிறப்பாக அமைய ஐ.நா. சார்பில் உறுதி யான நடவடிக்கைகள் தேவை என்பதே போராட்டத்தில் ஈடுபட்ட ஆப்கான் அகதிகளின் முக்கிய கோரிக்கையாக இருந்தது.

இந்தப் போராட்டத்தில், டில்லி யின் குட்டி காபூல் என்று அழை க்கப்படும் லாஜ்பத் நகர், நொய்டா, கிரேட்டர் நொய்டா, ஃபரீதாபாத் உள்ளிட்ட பகுதிகளில் தங்கியு ள்ள நூற்றுக்கணக்கான அகதி கள் கலந்துகொண்டனர்.(7-4)

# காலக்கெடுவை நீடித்தால் விளைவு மோசமாகும்

## தலிபான்கள் எச்சரிக்கை

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க படைகள் ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்குள் முழுமையாக வெளியேற வேண்டும்.அந்தக் காலக்கெடுவை நீட்டித்தால் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என தலிபான்கள் எச்ச ரிக்கை விடுத்துள்ளனர்.

வெள்ளை மாளிகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை செய் தியாளர்களைச் சந்தித்த அமெ ரிக்க ஜனாதிபதி ஜோ பிடன், அமெரிக்க படையினர் மற்றும் குடிமக்களை வெளியேற்றும் நடவடிக்கையை ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்குப் பின்னரும் நீட்டிப்பது குறித்து ஆலோசித்து வருவ தாகத் தெரிவித்திருந்தார். இந் நிலையிலேயே தலிபான்கள் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளனர். (7-4)

# ஹமாஸ் ஆயுத தயாரிப்பு மையங்களில் இஸ்ரேல் வான்வெளித் தாக்குதல்

(ஜெருசலேம்)

காசாமுனை பகுதியில் இரு ந்து இஸ்ரேல் நாட்டின் மீது ஹமாஸ் அமைப்பினர் அவ்வப் போது ரொக்கெட் மற்றும் ஏவுக ணைகள் மூலம் தாக்குதல் நடத்துவது வழக்கம்.

அந்த வகையில் காசா முனை யில் இருந்து எரி வாயு நிரப்பப் பட்ட தீப்பற்றக்கூடிய பலூ ன்களை இஸ்ரேலின் வடக்கு ப்பகுதியை குறிவைத்து பாலஸ் தீனர்கள் நேற்று முன்தினம் ஏவினர். பாலஸ்தீனர்களால் பறக்கவிடப்பட்ட பலூன்கள் இஸ்ரேலின் வனப்பகுதியில் விழுந்து அங்கு காட்டுத்தீ பரவ வழிவகுத்தது.

இத் தாக்குதலுக்கு பதில் தாக்குதலாக காசா முனையில் உள்ள ஹமாஸ் அமைப்பின ரின் ஆயுத தயாரிப்பு மையங் கள், ரொக்கெட் ஏவுதளங்கள் உள்ளிட்ட இடங்களை குறி வைத்து இஸ்ரேல் விமானப் படையினர் வான்வெளி தாக்கு தல் நடத்தினர். இதில், ஹமாஸ் அமைப்பின் ஆயுத தயாரிப்பு மையங்கள் அழிக்கப்பட்டன.

ஆனால், இந்த தாக்குதலில் உயிரிழப்பு ஏதேனும் ஏற்பட்டு ள்ளதா? என்பது குறித்த தகவல் வெளியாகவில்லை. (7-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியால் பயணிப்போருக்கு பி.சி.ஆர். பரிசோதனை



(கண்டாவளை )

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் மற்றும் மல் லாவி ஆகிய பிரதேசங்களில் ஊரடங்குச்சட்டம் நடை முறையில் உள்ள நிலையில் அதனையும் மீறி வீதியால் பயணிப்போரை வளைத்து பிடித்து பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்றைய தினம் பிராந்திய சுகாதார பிரிவினராலும், பொலிஸாரினாலும் மேற்கொள்ளப்பட்டது.

இதே வேளை அனைவருக்கும் தடுப்பூசி எனும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தின் நடமாடும் சேவை நேற்று முன் தினம் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பாலைப் பாணி / மூன்று முறிப்பு பகுதிகளிலும் நேற்றைய தினம் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட விநாயகபுரம் பகுதிகளிலும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.(7-4-315)

## பல்பொருள் அங்காடி தனிமைப்படுத்தப்பட்டது

(நெளுக்குளம்)

வவுனியா புதியபேருந்து நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள பிரபல பல்பொருள் அங்காடி (சுப்பர் மார்க்கெட்) சுகாதார பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டது.

குறித்த அங்காடியில் பணிபுரியும் ஊழியர் ஒருவரின் உறவினருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்ததனையடுத்து குறித்த அங்காடி 14 நாட்களிற்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அங்கு பணிபுரியும் ஊழியர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-4-299)

# விசுவமடுவில் மஞ்சள் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயி




(தருமபுரம்)

விசுவமடு பகுதியில் ஒரு விவசாயி தனது விடாமுயற்சியால் 1/2 ஏக்கர் அளவில் மஞ்சள் பயிர்ச்செய்கை செய்து வருகின்றார்.

இம்முறை மஞ்சள் செய்கையில் சுமார் 50 கிலோ மஞ்சள் பயிர்ச்செய்கை மேற்கொண்டு வருவதாகவும் தற்பொழுது நாட்டில் உரம் தட்டுப்பாடு காரணமாக அதிக உரம் தேவைப்படவுமில்லை எனவும் தெரிவித்தார்.

மாட்டு உரம் மற்றும் வைக்கோல் பயன்படுத்துவதன் மூலம் அதிக தண்ணீர் தேவைப்படுவதில்லை மற்றும் புற்கள் வளருவதையும் முற்றாக தடுக்கமுடியும் எனவும் தெரிவித்தார்.

இம்முறைமையில் பயிர்ச்செய்கை மேற்கொண்டால் 9 மாதங்களுக்குப் பின்னர் ஒரு சிறந்த விளைச்சலைப் பெறமுடியும் எனவும் ஏமது பகுதிக்கான மஞ்சள் தட்டுப்பாட்டினையும் ஓரளவு நிவர்த்தி செய்ய முடியும் எனவும் தெரிவித்தார். (7-4-316)



வவுனியா வடக்கில் நடமாடும் தடுப்பூசித் திட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. குறித்த பகுதிகளில் வசிக்கும் 60 வயதிற்கு மேற்பட்டோருக்கு இராணுவத்தின் ஏற்பாட்டில் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன. (படம்: சதீஷ்)

# வன்னேரிக்குளக் கிராமத்திற்கு நிரந்தர குடிநீர்த் திட்டம் வேண்டும்

## பொதுமக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் கிராமத்திற்கு நிரந்தர குடிநீர்த் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்த வேண்டும் என இக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1953ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இக்கிராமத்தில் தற்போது 500 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

நிலத்தடி நீரில் உவர்த்தன்மைகள் காணப்படுவதன் காரணமாக நன்னீர் நிலைகளைத் தேடி இக் கிராம மக்கள் குடிநீருக்காக செல்கின்ற நிலைமையில் வன்னேரிக்குளம் கிராமத்தில் நிரந்தர குடிநீர்த் திட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்பதே இக்கிராம மக்களின் கோரிக்கையாகும்.

வன்னேரிக்குளத்தின் குஞ்சுக்குளத்தின் உவர்ப் பரம்பல் தொடர்ச்சியாக ஆனைவிழுந்தான் மேற்கு பகுதி முழுமையாக தற்போது உவரடைந்துள்ளது.

வன்னேரிக்குளம் கிராமத்தினையும் ஆனைவிழுந்தான்குளம் கிராமத்தினையும் உவர்ப் பாதிப்பில் இருந்து பாதுகாப்பதற்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாகும். (7-4-350)

# ஒரு மாதச் சம்பளத்தை வழங்கிய மஸ்தான் எம்.பி.

(குருமன்காடு)

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தனது ஒரு மாத சம்பளத்தை கொவிட் தடுப்பு நிதியத்திற்கு வழங்கியுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்திற்காக தனது ஒரு மாத சம்பளத்தை கொவிட் தடுப்பு நிதியத்திற்கு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் வழங்கியுள்ளார்.

வன்னித் தேர்தல் தொகுதியில் 6 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ள நிலையில் முதலாவதாக தனது நிதியை இந்நிதியத்திற்கு அவர் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-4-250)

# குடிநீர் வழங்கலை இலகுவாக்க திட்டங்கள் சமர்ப்பிப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளியின் கரந்தாய்க் குளப் பகுதியில் கிணறு, மலசல கூடம் அமைப்பதற்கான திட்டங்கள் துறைசார் அமைச்சுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட இத்தாவில் போன்ற முக்கிய இடங்களில் திறந்த கிணறுகள் அமைக்கப்படுகின்றன.

இக்கிணறுகளில் இருந்து எதிர்காலத்தில் குடிநீர் வழங்கலை இலகுவாக மேற்கொள்ளலாம். அதனடிப்படையில் கரந்தாய்க்குளப் பகுதியில் கிணறு அமையுமானால் இப்பகுதிக்கான குடிநீர் வழங்கலை இலகுவாக மேற்கொள்ள முடியும். இதற்கான திட்டங்கள்தான் துறைசார் அமைச்சுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. திட்டங்கள் வெற்றியடையுமானால் கரந்தாய்ப் பகுதியில் கிணறு, மலசலகூடங்கள் பிரதேச சபையினால் அமைக்கப்படும் எனவும் பிரதேச சபை தவிசாளர் தெரிவித்தார். (7-4-350)

# ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதில்லை

## பொதுமக்கள் குற்றச்சாட்டு

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்ற குறைபாடுகள் பொது மக்களிடம் காணப்படுகின்றன.

மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் முல்லைத்தீவு அம்பகாமம் கிராமத்திற்கான இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து சேவையினை உடனடியாக நடத்துமப்படி உத்தரவிடப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்தும் பேருந்து சேவை அம்பகாமத்திற்கு நடத்தப்படவில்லை.

ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒன்றில் ஒதியமலைக் கிராமத்திற்கு பேருந்து சேவை நடத்துவது எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால் பேருந்து சேவை ஒதியமலைக் கிராமத்திற்கு நடைபெறவில்லை. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கரைதுறைப்பற்றின் நித்தகை குள வயல் நில விடுவிப்புகள், ஆண்டாங்குளத்தின் மக்கள் குடியேறுதல் போன்ற தீர்மானங்கள் முழுமைப்படுத்தப்படாமல் பயனற்ற கூட்டங்களாவே பல விடயங்கள் காணப்படுகின்றன.

எதிர்காலத்தில் மாவட்ட, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள் நடைபெற்றால் மக்களுக்கு நன்மை தருகின்ற உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக தீர்மானங்கள் எடுக்க வேண்டும் என்பதும் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே பொது அமைப்புகளின் கோரிக்கையாகக் காணப்படுகின்றன.

(7-4-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தல்கள்

**16**

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



1990 இன் 27 ஆம் இலக்க மாகாண சபைகள் (திருத்தச்) சட்டத்தின் 5 (3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் உறுப்பினரொருவர் அரசியலமைப்புக்கு மாறு செய்துள்ளார் அல்லது வெளிப்படையாக அதனை ஒப்புக்கொள்ள மறுத்திருக்கிறார் என்று ஆளுநர் மாகாண சபையொன்றின் தவிசாளருக்கு அறிவித்தவுடன் அத்தகைய திகதியிலிருந்து அத்தகைய உறுப்பினர் தகைமை இழக்கிறார்.

5 ஆம் பிரிவின் கீழ் இக்காரணத்தின் பேரில் மொத்த உறுப்பினர்களின் இரண்டில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் தகைமை இழந்து, அத்தகைய இழப்பை ஜனாதிபதிக்கு அறிவித்தவுடன் அச் சபை கலைக்கப்பட்டதாகிவிடுகிறது. வடக்கு- கிழக்கு மாகாணங்களின் மாகாணசபையின் விடயத்தில், ஆளுநரின் அறிவித்தலொன்றின் காரணமாக மாகாண சபை கலைக்கப்பட்டதாகக் கருதப்பட்டது.

### கலைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணசபைக்கு நியமனங்கள் கோரல்

வடக்கு-கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டதன் பின், 1990 இன் 29 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய கலைத்தலின் பேரில் தேர்தல்கள் ஆணையாளர் நியமனங்களைக் கோரவேண்டும். அதன் பிரகாரம் 1990, ஜூலை மாதம் 11 ஆம் திகதிய 618/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் நியமனங்கள் கோரப்பட்டன.

1990, ஜூலை மாதம் 12 ஆம் திகதிய 618/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் ஜனாதிபதியால் வழங்கப்பட்ட அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் இது நிறுத்தப்பட்டது.

### இரண்டாவது மாகாண சபைத் தேர்தல் -1993

இலங்கையின் மாகாணசபைகளுக்கான இரண்டாவது தேர்தல் 1993-05-17 ஆம் திகதி நடைபெற்றது. இத்தேர்தலானது வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களில் மட்டுமே நடத்தப்பட்டன. வடக்கு-கிழக்கு மாகாண சபையைப் பொறுத்த வரையில், 1990, ஜூலை மாதம் 11 ஆம் திகதிய 618/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் இச் சபைக்காகக் கோரப்பட்ட நியமனங்கள் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தொடர்ந்தும் வறிதாக்கப்பட்டு வருகின்றன.

இத்தேர்தலுக்கு மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை (1981 ஆம் ஆண்டு சனத்தொகைக் கணிப்பீட்டின்படி) பின்வருமாறு இருந்தது.

கொழும்பு-43, கம்பஹா-36, களுத்துறை-23, கண்டி-28, மாத்தளை-11, நுவரெலியா-17, காலி-22, மாத்தறை-17, அம்பாந்தோட்டை-14, குருநாகல்-35, புத்தளம்-15, அநுராதபுரம்-21, பொலநறுவை-10, பதுளை-19, மொனராகலை-13, இரத்தினபுரி-23, கேகாலை-19 ஆகும்.

சகல மாகாண சபைகளுக்குமான தேர்தல்கள், ஒரு போதும் ஒரே நாளில் நடைபெற்றதேயில்லை. 1988 ஆம் ஆண்டு மாகாண சபைகளுக்கான முதலாவது தேர்தல் மூன்று கட்டங்களாகவே நடைபெற்றன.

இரண்டாவது மாகாண சபைத் தேர்தல்கள் 1993 ஆம் ஆண்டு நடைபெற்ற போது, இணைக்கப்பட்ட வடக்கு- கிழக்கு மாகாண சபையைத் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தல்கள் நடைபெற்றன. அதன் பின்னர் இதுவரையில் மாகாண சபைத் தேர்தல்கள் ஒரு போதும் ஒரே நாளில் நடைபெறவில்லை.

இலங்கையின் மாகாண சபைகளுக்கான இரண்டாவது தேர்தல் 1993 இல் நடைபெற்றது. இத் தேர்தலானது வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களில் மட்டுமே நடத்தப்பட்டன.

இத்தேர்தலில் ஐ.தே.கட்சியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் (பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இலங்கையிலுள்ள இடது சாரி அமைப்புகளுடன் கூட்டிணைந்து ஏற்படுத்திய கட்சியே பொதுஜன ஐக்கிய முன்னணிஆகும்). ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (DUNF) யும் (ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவுக்கு எதிராகக் குற்றப்பிரேரணை கொண்டு வந்தமைக்காக ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான லலித் அதுலத்முதலி, காமினி திஸாநாயக்க, எம்.ஜி பிரேமச்சந்திர ஆகியோரால் புதிதாக உருவாக்கப்பட்ட கட்சியே ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியாகும்) மும்முனைப் போட்டியில் ஈடுபட்டன. முடிவில் 7 மாகாணங்களில் ஐ.தே. கட்சியானது 6 மாகாணங்களில் தனியாக அதிக ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட அதேநேரம், பொதுஜன ஐக்கிய முன்னணி மேல் மாகாணத்தில் மாத்திரம் அதிக ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது.

இத்தேர்தலின் போது பெறப்பட்ட வாக்குகளை அவதானிக்குமிடத்து ஐ.தே.கட்சியும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸூம், லிபரல் கட்சியும், ஒஸி அபேகுணவர்த்தனவின் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியும் இணைந்து பெற்ற வாக்குகள் 2,994,373 ஆகும்.

பொதுசன ஐக்கிய முன்னணி 2,244,495 வாக்குகளையும், புதிய கட்சியான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி 928,590 வாக்குகளையும் பெற்றுக்கொண்டன. இரண்டு எதிர்க்கட்சிகளும் இணையும் போது 3,173,085 வாக்குகள் பெறப்பட்டமை அவதானிக்கத்தக்கதாகும்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கு வழங்கப்பட்ட வாக்குகள் ஐ.தே.கட்சிக்கு எதிராக வழங்கப்பட்ட வாக்குகளாகக் கொள்ளப்பட்டன. 1977 ஆம் ஆண்டின் பின்னர் இத் தேர்தலின் தான் ஐக்கிய தேசியக் கட்சி 50% வீதத்துக்கும் குறைவான வாக்குகளைப் பெற்றாலும் கூட 388 மாகாணசபைஆசனங்களில் 187 ஆசனங்களை (போனஸ் ஆசனம் உட்பட) இக்கட்சியால் வெற்றிகொள்ள முடிந்தது. 4 மாகாண சபைகளில் ஐ.தே. கட்சியின் செல்வாக்கு மிகைத்திருந்தது.

இத்தேர்தலில் நகர்ப்புறங்களின் ஆதரவு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான பொ.ச.ஐ.முன்னணிக்கே கிடைத்துள்ளமையை அவதானிக்கலாம். உதாரணமாக மேல்மாகாணத்தில் 1991 உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் 565,270 வாக்குகளை மட்டுமே பெறமுடிந்தது.

ஆனால் 1993 மாகாண சபைத் தேர்தலில் பொ.ச.ஐ.முன்னணி 832,524 வாக்குகளையும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி 324, 817 வாக்குகளையும் பெற்றுக் கொண்டன. எவ்வாறாயினும் 1993 மாகாண சபைத் தேர்தலில் 133 ஆசனங்களை பொதுசன ஐக்கிய முன்னணியால் பெற்றுக் கொள்ள முடிந்தது. போனஸ்ஆசனங்களுடன் சேர்த்து இவ்வெண்ணிக்கை 135 ஆகும்.

இலங்கையின் அரசியல் நீரோட்டத்தில் புதிதாக இணைந்த ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி அது முகம் கொடுத்த முதல் தேர்தலிலேயே பெற்றுள்ள வெற்றியானது மகத்தானது. அளிக்கப்பட்ட வாக்குகளில் 18% வாக்குகளை (அதாவது 928,590 வாக்குகள்) தெரிவு செய்ய வேண்டிய 386 பிரதிநிதிகளுள் 53 பிரதிநிதிகளைப் பெற்றுக் கொண்டமையும் விசேட அம்சமாகும்.

இத்தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிலைப்பாடு ஐ.தே.கட்சியின் சார்பாகவே அமைந்திருந்தது. மலையக தமிழ் வாக்காளர் மத்தியில் சௌ. தொண்டமானின் தலைமைத்துவம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

**இத் தேர்தல் முடிவுகள் அட்டவணைகள் 4 A-G இல் காட்டப்பட்டுள்ளன.**

### அட்டவணை 4A- மேல் மாகாண சபைத் தேர்தல் 1993

| மாவட்டம் | கட்சிகள் | | | | |
|---|---|---|---|---|---|
| | UNP | PA | DUNF | SLMC | மொத்தம் |
| கொழும்பு | 16 | 17 | 10 | - | 43 |
| கம்பஹா | 15 | 17 | 4 | - | 36 |
| களுத்துறை | 10 | 9 | 3 | 1 | 23 |
| Bonus | - | 2 | - | - | 2 |
| மொத்தம் | 41 | 45 | 17 | 1 | 104 |

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியர்களின் சம்பளம் குறையாது - அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

**அரசு துறை ஊழியர்களின் சம்பளத்தை குறைக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை என அரசாங்கம் நேற்று அறிவித்துள்ளது.**



அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சரவையின் இணை பேச்சாளர்களில் ஒருவரான அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஓகஸ்ட் மாத சம்பளத்தை கொவிட்-19 நிதிக்கு நன்கொடையாக அளிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இது அரசுதுறையில் ஊதியக்குறைப்புக்கான முயற்சியல்ல என அவர் தெரிவித்தார். (நி-5)

# மக்கள் நடமாட்டம் அதிகரிப்பு முடக்கம் வெற்றியளிக்கவில்லை

## பாராளுமன்ற உறுப்பினர் அபேசிங்க சாடல்



(கொழும்பு)

நாடு முடக்கப்பட்டுள்ள நேரத்தில் வீதிகளில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் நடமாடுவதாக பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்துள்ளார்.நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.மேலும் தெரிவிக்கையில்,

தொழிற்சங்கம் நாட்டை மூடும்படி கேட்டுக் கொண்ட நேரத்தில் நாட்டை மூடவில்லை. இப்போது மூடியுள்ளனர்.ஆனால், அது வெற்றியளிக்கவில்லை. தற்போது வீதிகளில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் நடமாடுகின்றனர். உலகில் மிகவும் பின் தங்கிய ஐந்து நாடுகளில் ஒன்றென இலங்கையும்வந்து விட்டது என அவர் தெரிவித்தார். (நி-5)




மேலும் ஒரு மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகள் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டன.

# சுகாதார விதி மீறல் 639 பேர் கைது

(கொழும்பு)

கடந்த 24 மணி நேரத்தில் தனிமைப் படுத்தல் விதிகளை மீறிய 639 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச் சாட்டில் இதுவரையில் 57,435 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக [illegible] (நி-5)

# இன்று ஒரு தகவல்

## தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சங்கரதாஸ் சுவாமிகள்

ரொம்ப நாளைக்கு முன்னாடி ஒரு நாள்... கோவலன் நாடகம் நடந்தது. எங்கே? மதுரையிலே. அதிலே ஒரு முக்கியமான கட்டம். கண்ணகியிடம் சிலம்பை வாங்கிக்கொண்டு... அதை விற்பதற்காக மதுரை நகருக்கு புறப்படுகிறான் கோவலன்.

அந்த சமயத்திலே கண்ணகி பாடுகிற மாதிரி ஒரு நாடகப்பாடல்... நாடக ஆசிரியர் எழுதினது. அது என்ன பாட்டு என்றால்...

**“மா பாவியோர் கூடி வாழும் மதுரைக்கு**
**மன்னா போகாதீர் இன்று!”**

இது தான் அந்தப் பாட்டு. இதைக் கண்ணகி மேடையிலே பாடின உடனே கூட்டத்தில் சலசலப்பு. “நம்முடைய ஊரிலேயே வந்து நமக்கு முன்னாடியே நின்றுக்கொண்டு” “மா பாவியோர் கூடி வாழும் மதுரை! என்று சொல்கிறார்களே என்ன தைரியம்?”

மக்கள் சத்தம் போட ஆரம்பித்திட்டார்கள்... எதிர்ப்புக் குரல் எழுப்பினார்கள். “கொண்டு வா அந்த நாடக ஆசிரியரை!” என்று ஒரே சத்தம் கூச்சல். வேறு வழியில்லை. மெதுவாக மேடைக்கு வந்தார் அந்த நாடக ஆசிரியர்.

நான்கு பக்கத்திலிருந்தும் கேள்விக்கணைகள்... மக்களை பார்த்து கொஞ்சம் அமைதியாக இருங்கள் என்று சொல்லி விட்டு தன்னுடைய விளக்கத்தை சொல்ல ஆரம்பித்தார் அந்த நாடக ஆசிரியர்.

“மா” என்று சொன்னால் திருமகளாகிய லட்சுமி என்று அர்த்தம், “பா” என்றால் கலைமகளாகிய சரஸ்வதி, “வி” என்றால் மலைமகளாகிய பார்வதி. மாபாவியோர் – என்றால் திருமகளும், கலைமகளும், மலைமகளும் ஆகிய மூவரும் என்று அர்த்தம்.

இந்த மூன்று பேரும் வாழ்கின்ற மதுரை புனிதம் நிறைந்தது – சகல செல்வங்களும் நிறைந்தது. அப்படிப்பட்ட ஊரிலே நான் அணிந்து கொள்ளும் இந்தச் சாதாரண சிலம்பை யார் வாங்கிக் கொள்வார்கள்? என்கிற எண்ணத்தோடு தான் கண்ணகி கூறினாள்.

“ஆகவே மதுரையைச் சிறுமைப்படுத்தும் எண்ணம் எனக்கு இல்லை. பெருமைப்படுத்த நினைத்து தான் எழுதினேன்” என்றார். இந்த விளக்கத்தைக் கேட்டதும் எல்லோரும் சமாதானம் ஆனார்களாம். இப்படி விளக்கம் கொடுத்த அந்த ஆசிரியர் யார் தெரியுமா?

தமிழ் நாடக உலகின் முதல் ஆசான் சங்கரதாஸ் சுவாமிகள் தான். அவருக்கு நகைச்சுவை உணர்வும் அதிகம். 1920 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் அவர் தங்கியிருந்தார். நாடகம் நடக்கிறதிற்காக.

அவர் தங்கியிருந்த வீட்டுக்கு கொசு– மூட்டைப் பூச்சி அதிகமாக இருந்தது. அவரால் தூங்க முடியவில்லை. அவர் அனுபவித்த தொல்லைகள் ஒரு பாட்டாக உருவானது.

வேடிக்கையாக ஒரு பாட்டு எழுதினார்.

**“மூட்டையுங் கொசுவும் ஒரு வீட்டிலே மீட்டிங்போட்டால்**
**முன்னே நிற்க யாரால் முடியும்? – கொசு**
**மோகனராகம் போலச் சத்தம் – போட்டு**
**முன்னே நின்று செய்திடும் யுத்தம்...”**

இதை மறுநாள் நாடகத்திலே கோமாளி வேடம் போட்ட ஒரு சிறுவனை விட்டு பாடவைத்தார். எல்லோரும் சிரித்து ரசித்தர்களாம். சங்கரதாஸ் சுவாமிகள் கல்யாணமே செய்துக்கொள்ளவில்லை. துறவி மாதிரியே வாழ்ந்தார்.

தமிழ் நாடகக் கலைக்கு தன்னையே அர்ப்பணம் செய்து கொண்டவர். 1922 நவம்பர் மாதத்திலே ஒரு நாள் புதுச்சேரியிலே அவர் வாழ்க்கை முடிந்தது. அப்போது அவருக்கு வயது 55.

சங்கரதாஸ் சுவாமிகள் நாடக ஆசிரியர் மட்டும் அல்ல... மேடை நாடக இயக்குனர், தயாரிப்பாளர், அவரே ஒரு சிறந்த நடிகர். ஒரு தடவை “சாவித்திரி” நாடகத்திலே இவர் எமதர்மனாக வேடம் போட்டு நடித்தார். நாடகம் பார்த்துக் கொண்டிருந்த கருவுற்ற ஒரு பெண்மணிக்கு பயத்தினாலே அங்கேயே குழந்தை பிறந்துட்டுதாம்.

அந்த நிகழ்ச்சியின் பிறகு அவர் இந்த வேடம் போடும் போது ஜனங்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்கை கொடுக்க ஆரம்பித்திடுவார்களாம். நடிப்பென்றால் அப்படி இருக்க வேண்டும். இந்தக் காலத்து நடிகர் ஒருத்தர் சொன்னார்.

“சார்... நான் இந்த நாடகத்திலே நடிக்கிறப் போது முகத்திலே நவரசங்களையும் காட்டி நடித்தேன்... உணர்ச்சிகளை எல்லாம் நல்லா காட்டினேன். அப்படியிருந்தும் ஜனங்கள் கல்லை எடுத்து மேடையிலே வீசினார்கள் சார்!” என்றார்.

“[illegible]த்திலே உங்களுக்கு என்ன வேடம்?” என்று கேட்டேன்.


“செத்துக்கிடக்கிற பிணமாக நடித்தேன் சார்!” என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அச்சம்




ஒரு மடத்தில் துறவி ஒருவர் இருந்தார். நிறைய சீடர்கள் அவரிடம் கல்வி கற்று வந்தனர். சீடர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த அவர், “எல்லாத் தீமைகளுக்கும் அச்சம்தான் அடிப்படைக் காரணம் அச்சத்தால் வெறுப்பு வருகிறது.

பகை ஏற்படுகிறது. பேராசை உண்டாகிறது. அதனால் நாம் எந்தச் சூழலிலும் அச்சப்படக்கூடாது,” என்றார்.

குறுக்கிட்ட சீடர் ஒருவர், “ஐயா! அச்சத்தால் பேராசை உண்டாகும் என்கிறீர்கள். இதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை,” என்றார்.

அதற்கு அவர் பதில் ஏதும் சொல்லவில்லை. அன்றிரவு வழக்கம் போலத் துறவியும், சீடர்களும் உணவு உண்ண அமர்ந்தனர்.

அப்போது துறவியிடம் வந்த சமையல்காரர், “மடத்தில் அரிசி தீர்ந்து விட்டதை நான் கவனிக்கவில்லை.

இருந்த அரிசியை வைத்து இரவு சமையலை முடித்து விட்டேன். நாளை நகரத்திற்குச் சென்று அரிசி வாங்கி வந்தால்தான், சமையல் செய்ய முடியும். நண்பகலில் தான் உணவு தயாராகும். காலை உணவு சமைக்க வழி இல்லை,” என்றார்.

பிறகு அவர் எல்லோருக்கும் உணவு பரிமாறினார். துறவியும், சீடர்களும் உண்டு முடித்தனர். சீடர்களைப் பார்த்து துறவி, “இன்று நீங்கள் அனைவரும் வழக்கத்தை விட அதிகமாகச் சாப்பிட்டு உள்ளீர்கள் ஏன்?” என்று கேட்டார்.

“நாளை காலையில் உணவு கிடையாது என்று சமையல்காரர் சொன்னார். காலையில் பட்டினி கிடக்க வேண்டியிருக்கும். அதனால், இப்போது அதிகமாகச் சாப்பிட்டு விட்டோம்,” என்றார் சீடர்களில் ஒருவன்.

“நாளை காலையில் உணவு கிடைக்காது என்று அச்சம் கொண்டீர்கள். அதனால் வழக்கத்தை விட அதிகமாகச் சாப்பிட்டீர்கள்.

அச்சத்தால் பேராசை வரும் என்பதை இப்போது புரிந்து கொண்டிருப்பீர்கள் அல்லவா?” என்றார் துறவி.

பாடம் : அச்சத்தால் பேராசை வரும் என்பதை ஒப்புக் கொண்டனர் சீடர்கள்.

# மகாபாரதம்




அரசன் பதினெட்டுக் குற்றங்களை விலக்க வேண்டும். இவற்றில் வேட்டை, சொக்கட்டான், பகல் உறக்கம், பிறரை நிந்தித்தல், பெண் மயக்கம், மதம், வீண் பாட்டு, கூத்து, வாத்தியங்கள்,குடி ஆகிய இப் பத்தும் காமத்தால் உண்டாவன.

தெரியாத குற்றத்தை வெளிப்படுத்துவது, குற்றமற்றவனைத் தண்டிப்பது, வஞ்சனையாக ஒருவனைக் கொலை செய்வது, பிறர் புகழ் கண்டு பொறாமைகொள்வது, பிறர் குணங்களைக் குற்றமாகக் கூறுவது,பிறர் பொருளைக் கவர்ந்து கொள்வது, கடுஞ்சொல் கூறுவது, கடுமையான தண்டனை வழங்குவது ஆகிய எட்டும் சினத்தால் வருவன. அரசன் இவற்றை அறவே விலக்கவேண்டும்.

அரசன் எப்போதும் கர்ப்பிணியின் கருமத்தில் இருக்க வேண்டும். கர்ப்பிணி தன் மனதிற்கும், நாவிற்கும் சுவையான உணவு உண்ணாமல் கர்ப்பத்தை வளர்க்கத் தக்க வழியில் இருப்பது போல அரசனும் தனக்கு வேண்டும் என்ற செயலைத் தள்ளி விட்டு உலகுக்கு நன்மை பயக்கும் தரும வழியில் செல்ல வேண்டும்.

தைரியமாக நியாயமான தண்ட நீதியைச் செலுத்த வேண்டும். அப்படி நடந்து கொண்டால் யாரும் குறை சொல்ல மாட்டார்கள்.

அரசன் வேலைக்காரருடன் பரிகாசமான வார்த்தைகள் பேசக் கூடாது. பரிகாசமாகப் பேசும் மன்னனை ஏவலர்கள் அவமதிப் பார்கள். அரசனின் உத்தரவை மீறி நடப்பார்கள். ரகசியத்தைக் கேட்பார்கள்.

அத்துடன் நில்லாது அதனைப் பறை சாற்றுவார்கள். இலஞ்சம் வாங்கி அரச காரியத்தைக் கெடுத்து விடுவார்கள். அரசன் உத்தரவு எனப் பொய்ச்செய்திகளை பரப்புவர்.

அரசன் எதிரில் அநாகரிகமாக நடந்து கொள்வர்.நான் சொன்னால் சொன்னபடி அரசன் நடப்பான்என ஆணவத்துடன் உரைப்பர்.ஆகவே வேலைக்காரர்களிடம் விழிப்பாக இருக்க வேண்டும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையான மனதால் ஞானம் கிட்டும்போது வாழ்வில் அமைதியும் பூலோக சொர்க்கமும் ஏற்படும்.

– வால்ட்டேர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்த அரசியல் கனவான் மங்கள சமரவீர

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கொரோனாத் தொற்றால் நேற்றைய தினம் (24) இறந்துபோன செய்தி இலங்கை அரசியலில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நாட்டின் அரசியல் புலத்தில் மங்கள சமரவீரவின் வகிபாகம் காத்திரமானது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் இணைந்து மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்குவதில் மங்கள சமரவீரவின் பங்கு முதன்மையானது என்பதை யாரும் மறந்துவிடமாட்டார்கள்.

தவிர, கடந்த பொதுத் தேர்தலின்போது ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாஸவும் முரண்பட்டுக்கொண்டு கன்னை பிரிந்து தேர்தலில் நின்றபோது ஒரு அரசியல் கனவானாக மங்கள சமரவீர தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலகிக் கொண்டார்.

இவையாவற்றுக்கும் மேலாக எது நீதியோ? எது நியாயமோ? அதனை வெளிப்படையாகக் கூறுவதில் மங்கள சமரவீர ஒரு நேர்மையான சிங்கள அரசியல் தலைவராக விளங்கினார்.

உண்மை, தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர் அவர் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டத்தொடரில் வெளிவிவகார அமைச்சராக கலந்துகொண்ட மங்கள சமரவீர இணை அனுசரணைக்கு இணங்கிக் கொண்டார்.

இதனால் அவருக்கு எதிராக சிங்களப் பேரினவாதிகள் போர்க்கொடி தூக்கினர். ஆனால் அவர் அதுபற்றி இம்மியும் கலங்கவில்லை.

இதேபோல அரசியல் அமைப்புச் சீர்திருத்த ஏற்பாடுகள் நடந்தபோது பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று பௌத்த பீடங்கள் வலியுறுத்தியபோது பௌத்த மதம் மட்டுமல்ல இலங்கையில்உள்ள அனைத்து மதங்களும் சமத்துவமாக மதிக்கப்பட வேண்டும் என பகிரங்கமாகக் கூறினார்.

இவ்வாறு மங்கள சமரவீர கூறியபோது பௌத்த பீடங்கள் கெம்பி எழுந்தன. எனினும் தனது கருத்து இலங்கையின் இன ஒற்றுமைக்கானது என்பதில் அவர் மிகவும் ஆணித்தரமாக இருந்தார்.

இவ்வாறாக தமிழ் மக்களின் விடயத்தில் நேர்மையுடன் செயற்பட்ட முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, 2009 ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் யுத்தம் நடந்தபோது அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஒரு அவசர கடிதத்தை எழுதியிருந்தார்.

அதில் தங்களின் யுத்த அணுகுமுறையை ஏற்றுக் கொள்ள முடியாது எனக் குறிப்பிட்டிருந்தார்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டபோது தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்த மிக முக்கியமான சிங்கள அரசியல் தலைவர் மங்கள சமரவீர என்பதை தமிழ் மக்கள் ஒருபோதும் மறந்துவிடமாட்டார்கள்.

அண்மையில்கூட; தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தில் மாகாண சபை முறைமை தோல்வி கண்டுள்ளது எனவும் அவர் ஆணித்தரமாக அறிக்கையிட்டார்.

இவ்வாறாக தமிழ் மக்களின் விவகாரத்தில் நேர்மையுடன் செயற்பட்ட முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் திடீர் மறைவு தமிழ் மக்களுக்கு மிகப் பெரும் இழப்பு.

இன ஒற்றுமையை வலியுறுத்தி நின்ற அவரின் மறைவு சிங்களப் பேரினவாதிகளின் இனவாத நோயை இன்னமும் கூட்டப் போகிறது என்பதுதான் உண்மை.

## காங்கேசன்துறை – தமிழகம் இடையே படகு சேவையை ஆரம்பிப்பதற்கான கேள்விமனு கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.காங்கேசன்துறை - தமிழகம் காரைக்கால் இடையில் பயணிகள் படகு சேவையை ஆரம்பிக்க, போக்குவரத்துக்கான கப்பல் சேவை வழங்குனர்களிடமிருந்து கேள்விமனு இந்தியாவில் கோரப்பட்டுள்ளது.

குறித்த கப்பல் சேவை வழங்குனர்களிடமிருந்து வாரத்தில் மூன்று நாட்கள் யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் இருந்து இந்தியாவின் காரைக்கால் துறைமுகம்வரை குறித்த சேவை வழங்கப்பட வேண்டும்.

கப்பல் முழு அதிகபட்ச நீளம் - 110 Mts மற்றும் அதிகபட்ச வரைவு - 8.5 Mts. பயணம் சேவைகள் ஆண்டு முழுவதும் செயற்பாடு (SW மற்றும் NE பருவமழை உட்பட). இந்திய துறைமுகங்களை அழைப்பதற்கு பொருத்தமான வகைப்படுத்தப்பட்ட மற்றும் சான்றிதழ் பெற்ற படகு. துறைமுகத்தில் தரிக்கலாம்.

இதன்மூலம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தகம், போக்குவரத்து தொழில்நுட்பம் ஆகியவற்றை பரிமாறிக் கொள்ளும் ஒரு நடவடிக்கையின் அங்கமாக குறித்த செயற்திட்டம் இடம்பெறவுள்ளது.

இதற்காக இந்திய மத்திய அரசின் சம்மதத்தை இந்தியாவின் பா.ஜகவின் மூத்த தலைவர்களில் ஒருவரும் மணிப்பூர் ஆளுநருமான இல.கணேசன் முன்னெடுத்து வருகிறார். இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி அரச, பிரதிநிதிகள் மற்றும் சிவ சேனை அமைப்பின் தலைவர் மறவன் புலவு க. சச்சிதானந்தன் ஆகியோர் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கொரோனாவால் வருமானம் இழந்த பேருந்து உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு நிவாரணம்

(கொழும்பு)

வருமானத்தை இழந்துள்ள பேருந்து உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அடுத்த வாரம்முதல் நிவாரணம் வழங்கப்படவுள்ளது எனப் போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்குத் தேவையான இறுதிக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

வாகன உதிரிப்பாகங்கள், பேட்டரிகள், டயர்கள், எண்ணெய் வகைகள் மற்றும் காப்புறுதி, லீசிங் கட்டணங்களுக்கான ஒரு தொகை பணத்துக்குரிய வவுச்சர்கள் வழங்கப்படவுள்ளன.

இதனைத் தவிர, வருமானம் இழந்துள்ள பஸ் ஊழியர்கள் தங்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்குரிய பணத்துக்கான வவுச்சர்களும் வழங்கப்படவுள்ளன என்றார். (ம-3)

## சாவகச்சேரிப் பகுதியில் கசிப்பு உற்பத்தி

### ஒருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவர் சாவகச்சேரி பொலிஸாரால் நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது இருபது லீற்றர் கசிப்பு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த நபரை கைது செய்வதற்கு பொலிஸாருக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் மேலும் மூவரை சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர். (ம-3,30)

## அஜித் ரோஹணவுக்கு கோவிட் தொற்று உறுதி


(கொழும்பு)

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரும் முன்னாள் பொலிஸ் பேச்சாளருமான அஜித் ரோஹணவுக்கு கோவிட் தொற்று உறுதியாகியுள்ளது.

இவர் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அவரது உடல்நிலை தொடர்பில் கவலையடையத் தேவையில்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம-3)

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

ஸ்ரீராமகிருஷ்ணர் (நரேந்திரரிடம்): 'நரேந்திரா, நீ என்ன நினைக்கிறாய்? உலகியல் மக்கள் எவ்வளவோ இகழ்ந்து பேசுகின்றனர். ஆனால் ஒன்று. யானை போகும்போது அதன் பின்னால் எத்தனையோ மிருகங்கள் எப்படியெல்லாமோ கூச்சலிடுகின்றன. யானை திரும்பிக்கூட பார்ப்பதில்லை. உன்னை யாராவது இகழ்ந்து பேசினால் அவர்களைப்பற்றி நீ என்ன நினைப்பாய்?'

நரேந்திரர்: 'நாய் குரைக்கிறது என்று நினைப்பேன்.'

ஸ்ரீராமகிருஷ்ணர் (சிரித்துக்கொண்டு): 'வேண்டாமடா, அவ்வளவு தூரம் போகாதே!' (எல்லோரும் சிரித்தனர்)

'கடவுள் எல்லா உயிரிலும் இருக்கிறார். ஆனால் நல்லவர்களுடன் நெருங்கிப் பழகலாம், கெட்டவர்களைக் கண்டால் தூர விலகி நிற்க வேண்டும். புலியிலும் நாராயணன் இருக்கிறார். அதற்காக யாரும் புலியைக் கட்டித் தழுவிக்கொள்ள முடியாது. (எல்லோரும் சிரித்தனர்) புலியும் நாராயணன்தானே, அதைக் கண்டு ஏன் ஓட வேண்டும் என்று நீ கேட்கலாம். புலி வருகிறது. ஓடிவிடு" என்று கூறி எச்சரிக்கிறார்களே அவர்களும் நாராயணன்தானே? அவர்களுடைய வார்த்தைகளை ஏன் கேட்கக் கூடாது என்பதுதான் என் பதில்.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2021-16.09.2021

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**பிறரிடம் யோசனை கேட்டாலும் தங்கள் முடிவையே செயற்படுத்தும் தனுசு இராசி வாசகர்களே!**

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் வியாழன் 3 ஆம் இடத்தில் வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். 6 இல் ராகுவும், 12 இல் கேதுவும் பலம் பெற்றிருக்கிறார்கள். எனவே விரயங்கள் கூடும். வீடுமாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் வரும். மனப்பயம் அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

உங்கள் இராசிக்கு தன - சகாய ஸ்தானாதிபதியாக விளங்குபவர், சனி. அவர் வக்கிர இயக்கத்தில் இருப்பதால் தன வரவு திருப்திகரமாக இருக்காது. ஒரு தொகை செலவழிந்த பின்னரே அடுத்த தொகை கரங்களில் புரளும். வியாபாரத்தில் உள்ள இழப்புகளை ஈடுகட்ட கடன் வாங்கும் சூழ்நிலையும் உண்டு.

உங்கள் இராசிநாதனாகவும், 4ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர், குரு. அவர் மாதத் தொடக்கத்திலேயே வக்ரம் பெற்று 3ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அதிலும் வக்கிர இயக்கத்தில் இருப்பதால் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. கொடுக்கல்- வாங்கல்களில் ஏமாற்றத்தை சந்திப்பீர்கள்.

**உச்ச புதன் சஞ்சாரம்**

ஓகஸ்ட் 23 ஆம் திகதி, கன்னி இராசிக்கு புதன் செல்கிறார். அங்கு அவர் உச்சம் பெறுகிறார். தொழில் ஸ்தானத்தில் புதன் உச்சம் பெறுவது யோகம்தான். தொழில் முன்னேற்றம் உண்டு. தடைகள் தானாக விலகும். மங்கல செய்தி மனை தேடி வரலாம். சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும்.




# ஆரோக்கியத்தில் அக்கறை தேவை

**சொந்த வீட்டில் சுக்கிரன்**

செப்டெம்பர் 6 ஆம் திகதி, துலாம் இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அது அவருக்கு சொந்த வீடாகும். அங்ஙனம் பலம் பெறும் சுக்கிரனின் மீது குருவின் பார்வையும் பதிகிறது. எனவே ஓரளவு நற்பலன்கள் கிடைக்கலாம். குருவின் பார்வை பலத்தால் சில நன்மைகள் நடைபெறும். குறிப்பாக குடும்பப் பிரச்சினைகள் தீரும். அடிப்படை வசதிகள் பெருகும்.

**கன்னி-செவ்வாய் சஞ்சாரம்**

செப்டெம்பர் 7 ஆம் திகதி, கன்னி இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், 10-ம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது குடும்பத்தில் உதிரி வருமானங்கள் கிடைக்கலாம். உத்தியோகத்தில் கூடுதல் வருமானத்திற்கான வாய்ப்பு வரும். பெற்றோர்களின் உடல் நலத்தில் கவனம் தேவை.

**குருவின் வக்கிர இயக்கம்**

மாதத் தொடக்கத்தில் குரு, கும்ப இராசியில் வக்கிரம் பெற்றிருக்கிறார். அவர் செப்டெம்பர் 14 ஆம் திகதி மகர இராசிக்கு வருகிறார். அங்கும் வக்கிர இயக்கத்திலேயே இருக்கிறார். மகர இராசி குருவிற்கு நீச்ச வீடாகும். எனவே இக்காலத்தில் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். மனக்கவலை கூடும். மாற்றுக் கருத்துடையோர் எண்ணிக்கை உயரும். எந்த வேலையையும் கவனமாகச் செய்ய இயலாது. பிரச்சினைகள் அதிரிக்கும் இந்த நேரத்தில், தசாபுத்திக்கேற்ற தெய்வத்தை தேர்ந் தெடுத்து வழிபடுவது நல்லது. இம்மாதம் வியாழக்கிழமை தோறும் தட்சிணாமூர்த்தியை வணங்குங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். வருமானப் பற்றாக்குறை இருந்தாலும் சமாளித்து விடுவீர்கள். கணவன்-மனைவிக்குள் பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்படுங்கள்.

பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும். சுபவிரயங்களை மேற்கொள்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது.



**பொறுமையோடு செயற்பட்டு பெருமைகளைப் பெறும் மகர இராசி வாசகர்களே!**

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி பகவான் வக்கிரம் பெற்று உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். தனாதிபதியாக விளங்குபவர் சனி என்பதால் இம்மாதம் பொருளாதாரப் பிரச்சினை அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் தாமதம் ஏற்படும். எந்தக் காரியத்தையும் எடுத்தோம், முடித்தோம் என்று செய்ய இயலாது.

ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகிறது. இப்பொழுது ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடக்கிறது. வக்கிர இயக்கத்தில் பலமிழந்து சனி சஞ்சரிப்பதால் கடுமையான பாதிப்பு இருக்காது. இருப்பினும் சில காரியங்கள் தாமதப்படும். மனக் குழப்பம் அதிகரிக்கும். வாகனப் பழுதுகளும் வாட்டம் தரும்.

குரு பகவானும் வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அவர் வக்கிர இயக்கத்தில் இருக்கும் பொழுது சகோதர சச்சரவுகள் ஏற்படும். பயணங்களில் இடையூறு வரலாம். சுப காரியங்கள் இல்லத்தில் நடைபெறும் பொழுது அதைக் கண்டு களிக்க இயலாமல் போகலாம். வழக்குகள் உங்களுக்கு சாதகமாக அமையுமா என்பது சந்தேகம் தான்.

**உச்ச புதன் சஞ்சாரம்**

ஓகஸ்ட் 23 ஆம் திகதி, கன்னி இராசிக்கு புதன் செல்கிறார். அங்கு அவர் உச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் உச்சம் பெறும்பொழுது, உத்தியோகத்தில் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். ஊதிய உயர்வும், இலாகா மாற்றங்களும் கூட வந்து சேரலாம். தந்தை வழி உறவில் இருந்த விரிசல்கள் அகலும். சகோதர ஒற்றுமை பலப்படும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

**சொந்த வீட்டில் சுக்கிரன்**

செப்டெம்பர் 6 ஆம் திகதி, துலாம் இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அது அவருக்கு சொந்த வீடாகும். அங்ஙனம் பலம்பெறும் சுக்கிரன் மீது குருவின் பார்வை பதிகின்றது. எனவே உங்கள் இராசியைப் பொறுத்தவரை நற்பலன்கள் கிடைக்கும். உங்கள் இராசிக்கு 5,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன் என்பதால் தொழில் முன்னேற்றம் உண்டு. பிள்ளைகளால் பெருமை சேரும்.




# புதிய முயற்சிகளில் தாமதம் ஏற்படும்

**கன்னி-செவ்வாய் சஞ்சாரம்**

செப்டெம்பர் 7 ஆம் திகதி, கன்னி இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, பூமியால் யோகம் உண்டு. தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முன்னோர் வழி சொத்துக்களில் முறையான பங்கீடு கிடைக் கும்.

**குருவின் வக்கிர இயக்கம்**

மாதத் தொடக்கத்தில் குரு, கும்ப இராசியில் வக்கிரம் பெற்று சஞ்சரிக்கிறார். அவர் செப்டெம்பர் 14 ஆம் திகதி மகர இராசிக்கு வருகிறார். அங்கும் வக்கிர இயக்கத்திலேயே இருக்கிறார். மகர இராசி குருவிற்கு நீச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு விரயாதிபதியான குரு நீச்சம் பெறுவது நன்மைதான். விரயத்திற்கேற்ற அளவிற்கு பொருளாதாரம் வந்து கொண்டே இருக்கும். வீடு மாற்றங்களும், இடமாற்றங்களும் உறுதியாகலாம். இம்மாதம் வராஹியை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

ஜென்மச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் எதையும் யோசித்து செய்வது நல்லது. கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை. சுபவிரயங்கள் அதிகரிக்கும். எதையும் திட்டவட்டமாக செய்ய இயலாது. கணவன் - மனைவி அனுசரித்துச் செல்லுங்கள்.

உதிரி வருமானங்கள் உண்டு. மாதக் கடைசியில் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோவிட்டால்...

துள்ளார்.

இதன்மூலம் நாட்டில் 2020 ஜனவரி தொடக்கம் நேற்று முன்தினம் வரை 7 ஆயிரத்து 750 பேர் கோவிட்-19 நோயி னால் உயிரிழந்துள்ளனர்.

நாட்டில் ஓகஸ்ட் மாதத்தின் முதல் 23 நாட்களில் சுமார் 3 ஆயிரத்து 200 பேர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ள னர். (ம-3)

## 4 இலட்சத்தை...

உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் மொத்த கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 398, 801 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் கொரோனாத் தொற்றால் பாதிக் கப்பட்ட 2,386 பேர் நேற்றையதினம் குணமடைந்துள்ளனர்.

அதன்படி 346,767 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என்பதுடன் 43,597 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-3)

## இளைஞனுக்கு...

பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் குருநகர் கடற்கரை வீதியில் திருச்சிலுவை சுகநல நிலையத் துக்கு அண்மையாக கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணியளவில் ஒரு மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவரை வேறு இரண்டு மோட்டார் சைக்கிளில் துரத்தி வந்த நால்வர் வழிமறித்து சரமாரி யான வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தி னர்.

தாக்குதலில் படுகாயமடைந்த மூவரும் குருதி வெள்ளத்தில் கிடந்த நிலையில் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களினால் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப் பட்டனர். மூவரில் ஒருவரின் கால்கள் இரண்டும் கடுமையாக வெட்டுக்காயங் களுக்கு உள்ளாகியது.

அவர் நேற்று முன்தினம் திங்கட் கிழமை உயிரிழந்துள்ளார்.

அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கோவிட்-19 நோய்த் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள் ளது.

அதனால் உடற்கூற்றுப் பரிசோதனை யின் பின் அவரது சடலம் யாழ்ப்பாணம் மாநகர மருத்துவ அதிகாரியின் அறிவுறுத் தலில் மின் தகனம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,18,33)

## மங்கள...

இலங்கை அரசியலில் பல திருப்பு முனைகளுக்கு காரணமாக திகழ்ந்தவர் மங்கள சமரவீர.

அரசியல் பின்னணி கொண்ட மஹா னாம சமரவீர மற்றும் ஹேமா சமரவீர தம்பதியரின் புதல்வராக 1956ஆம் ஆண்டு மங்கள சமரவீர பிறந்தார்.

அரசியல் வாரிசான மங்கள சமரவீர, 1983ஆம் ஆண்டு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மாத்தறை மாவட்ட தலைமை அமைப்பாளராக தனது அரசியல் பய ணத்தை ஆரம்பித்தார்.

மாத்தறை தேர்தல் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி, தேர்தலில் போட்டி யிட்ட அவர், 1989ஆம் ஆண்டு முதற் தடவையாக பாராளுமன்றத்திற்கு பிர வேசித்தார்.

நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை, தொலைத்தொடர்புகள், தபால் அமைச் சுகளை திறம்பட வழிநடத்திய மங்கள சமரவீர, அந்த அரசாங்கத்தின் பிரதி நிதி அமைச்சராகவும் பதவி வகித்தார்.

2001ஆம் ஆண்டு தேர்தலில் அடைந்த தோல்வியை அடுத்து எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவாக நியமிக்கப்பட்டதுடன், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொருளா ளராகவும் செயற்பட்டுள்ளார்.

2004ஆம் ஆண்டு சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க ஆட்சியில் துறை முகங்கள், விமான சேவைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சரவை அந்தஸ் துள்ள அமைச்சர் பதவி மங்கள சமரவீர விற்கு வழங்கப்பட்டது.

2006ஆம் ஆண்டு மகிந்த ராஜ பக்ஷவை ஜனாதிபதியாக அரியணையில் அமர்த்த பாடுபட்ட மங்கள சமரவீர, அந்த அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச் சராக பதவியேற்றிருந்த நிலையில், அனுர பண்டாரநாயக்க மற்றும் ஸ்ரீபதி சூரியாராச்சி ஆகியோருடன் எதிர்க்கட்சி யில் அமர்ந்தார்.

பின்னர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி யில் இணைந்து புதிய அரசியல் பய ணத்தை மங்கள சமரவீர ஆரம்பித்தார்.

அன்று முதல் எதிர்க்கட்சியில் இருந்து அரசியலில் ஈடுபட்ட மங்கள சமரவீர, தாம் வெற்றிபெறச் செய்த மகிந்த ராஜபக்ஷவை தோற்கடித்து மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி கதிரையில் அமர்த்த பாரிய பங் களிப்புச் செய்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் வெளி விவகார அமைச்சர் பதவி மங்கள சமரவீர வசமானது. நாட்டின் அரசியல் மாற்றத்தை முன்கூட்டியே அறிந்த மங்கள சமரவீர, 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி தாம் வகித்த நிதி அமைச்சர் பதவியைத் துறந்தார்.

2020ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவிருந்த தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என ஜூன் மாதம் அவர் விடுத்த அறிவிப்பு அனை வரையும் வியப்பில் ஆழ்த்தியது.

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி நேற் றுக் காலை உயிரிழந்த மங்கள சமர வீரவின் இறுதிக் கிரியைகள் சுகாதார நடைமுறைகளுக்கமைய பொரளையில் நேற்று மாலை நடைபெற்றன.

இதன்போது ஆளும், எதிர்க்கட்சி உறுப் பினர்கள் அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். (ம-3)

## பிரதேச செயலர்...

இதேவேளை, தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்தவர்களுக்கும் பி.சி.ஆர் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டுள்ள தாகவும் தெரியவந்துள்ளது. (ம-3)

## யாழில் மட்டும்...

வயதுடைய பெண் ஒருவரும் நவாலி யைச் சேர்ந்த 81 வயதுடைய ஆண் ஒருவரும் உயிரிழந்தனர்.

இதேவேளை, கொடிகாமத்தைச் சேர்ந்த 83 மற்றும் 75 வயதுடைய ஆண்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் அறிவாலயம் கரணவாய் தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த 67 வயது டைய ஒருவரும் கொரோனாத் தொற்றி னால் உயிரிழந்துள்ளார்.

இரு நாட்களுக்கு முன் வீட்டில் நினை வற்று கிடந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது அவர் உயிரிழந்துள்ள தாக தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து அவருக்கு பிசிஆர் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டது.

இதன் முடிவுகள் நேற்று வெளியான நிலையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

குறித்த நபர் உடுப்பிட்டி சந்தையில் தேங்காய் வியாபாரத்தில் ஈடுபடுபவர் எனத் தெரியவந்துள்ளது.

மேலும் வவுனியாவில் மரணமடைந்த இருவருக்கும் மேற்கொண்ட பரிசோதனை யில் இருவருக்கும் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதி யில் வசிக்கும் 28 வயது இளைஞன் ஒரு வர் திடீரென உடல் சுகவீனமுற்ற நிலை யில் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தார்.

இருப்பினும் அவர் வைத்தியசாலை யில் அனுமதிக்கப்படுவதற்கு முன்னரே மரணமடைந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த இளைஞ னுக்கு மேற்கொண்ட பிசிஆர் பரிசோத னையில் கோவிட் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது.

அத்துடன், வவுனியா, புளியங்குளம் வைத்தியசாலையில் சுகவீனம் காரண மாக அனுமதிக்கப்பட்ட 55 வயதுடைய நப ரொருவர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக் காக வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

வவுனியா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டபோது அவர் மரணமடைந் தார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் அவருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் வவுனியா வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்றுவந்த நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த 66 வயது நபர் ஒரு வரும் கொரோனாவால் உயிரிழந்துள்ளார். (ம-3,18,30,33,60,250,281,299)

## வவுனியாவில்...

அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று இரவு வெளியாகின. அதில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வவுனியா, வவுனியா வடக்கு, செட்டி குளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவு களை உள்ளடக்கியதாக மாவட்டம் முழு வதும் கோவிட் தொற்றுப் பரவல் அடைந் துள்ள நிலையில் 152 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்றாளர்களை கோவிட் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர் புடையவர்களை தனிமைப்படுத்துவதற் கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத் துள்ளனர். (ம-3,250)

## சுகாதாரப் பணி...

நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சங்கத்தின் தலைவர் தேவிகா கொடி வாக்கு இதனைக் குறிப்பிட்டார்.

சுகாதார பணியாளர்கள் எண்ணிக்கை யில் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால், சுகாதார பணியாளர்களுக்கு அதிக வேலைப்பளு மற்றும் அழுத்தம் உள்ளதாக கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

சுகாதார ஊழியர்கள் தற்போது பாது காப்பற்றவர்கள். சில மருத்துவர்கள் மற் றும் தாதியர்கள் வைரஸால் உயிரிழந் துள்ளனர்.

இரத்தினபுரி மருத்துவமனையில் அம்புலன்ஸ் சாரதி நேற்று முன்தினம் வைரஸால் உயிரிழந்துள்ளார்.

அதே நேரத்தில் நோயாளர் விடுதி எழுதுநர் மற்றும் சிற்றூழியர் ஆகியோர் கொரோனா வைரஸால் உயிரிழந்த சுகா தார ஊழியர்களில் மிகச் சமீபத்தியவர்கள்.

தினமும் கோவிட் - 19 நோய்த்தொற் றுக்கு சுகாதாரப் பணியாளர்கள் உயிரி ழப்பதற்கு காரணம் வைரஸ் காரணமாக குறைந்து வரும் பணிக் குழுவுடன், பணியில் உள்ள ஊழியர் களின் எண்ணிக்கை அதிகமாக இருப்ப தாகும்.

கோவிட் -19 க்கு ஒரு சுகாதார ஊழியர் உயிரிழந்தால், ஓய்வூதியத்திற்கு தகுதி யுள்ளவரை, அடுத்த சுகாதார ஊழியர் களுக்கு உரிய உதவித்தொகை வழங்க சுகா தார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண் டும் என்றார். (ம-3)

## பயணக் கட்டுப்...

(GMOA) தெரிவித்துள்ளது.

பயணக் கட்டுப்பாடுகள் எந்த நேரத்தில், எப்படி விதிக்கப்பட வேண்டும் என்பதை சுகாதார அமைச்சின் தொழில்நுட்பக் குழு முடிவு செய்ய வேண்டும் எனவும் GMOA உதவி செயலாளர் டாக்டர் சமந்தா ஆனந்த நேற்று ஊடகங்களிடம் கூறினார்.

தொழில்நுட்ப முடிவுகளை இராணுவம் மற்றும் பொலிஸ் செயற்படுத்த வேண்டும்.

முடிவுகள் சரியாக செயற்படுத்தப்பட வில்லை என்றால், மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என் றும் குறிப்பிட்டார். (ம-3)

## 2 ரிச்டர்...

அம்பாந்தோட்டையில் நேற்றிரவு 9.19 மணியளவில் நில அதிர்வு உணரப்பட் டுள்ளதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

2 ரிச்டர் அளவில் நில அதிர்வு உண ரப்பட்டதாக பணியகத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ம-3)

## வடக்கில்...

வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 460 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் 98 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவற்றின் விபரம் வருமாறு.

**கிளிநொச்சி மாவட்டத்தில் 37 பேர்**

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை யில் 04 பேர், பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 21 பேர், பளை பிரதேச வைத்தியசாலையில் 12 பேர்.

**யாழ்.மாவட்டத்தில் 33 பேர்**

யாழ்.போதனா வைத்தியசாலையில் 14 பேர், தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலையில் 04 பேர், சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 04 பேர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 02 பேர், பண்டத்தரிப்பு பிரதேச வைத்திய சாலையில் 03 பேர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 02 பேர், சண்டிலிப் பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர், யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர், ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை யில் ஒருவர், சங்கானை பிரதேச வைத் தியசாலையில் ஒருவர்.

**வவுனியா மாவட்டத்தில் 09 பேர்**

வவுனியா மாவட்ட வைத்தியசாலை யில் 05 பேர், வவுனியா சுகாதார வைத் திய அதிகாரி பிரிவில் 02 பேர்,மாமடு பிர தேச வைத்தியசாலையில் ஒருவர், செட்டி குளம் வைத்தியசாலையில் ஒருவர்.

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 08 பேர்**

முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலையில் 03 பேர், மாந்தை கிழக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 3 பேர், புதுக்குடியிருப்பு ஆதார வைத்திய சாலையில் ஒருவர், மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் ஒருவர்.

மேலும் மன்னார் மாவட்ட வைத்திய சாலையில் 07 பேரும் காங்கேசன்துறை கடற்படை முகாமில் 04 பேரும் தொற்றாளர் களாக அடையாளம் காணப்பட்டனர்.

அத்துடன் வவுனியா மாவட்டத்தில் 152 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் 3 ஆயிரம் குடும்பங்களுக்கு இடர்கால நிதி வழங்கப்பட்டது

## அரச அதிபர் மகேசன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நேற்றையதினம் 3 ஆயிரம் குடும்பங்களுக்கு இடர்கால நிதி வழங்கப்பட்டதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் அரசின் இடர்கால நிதி வழங்கல் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

நெடுந்தீவு, வேலணை, யாழ்ப்பாணம், மருதங்கேணி மற்றும் பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மூவாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அரசினால் வழங்கப்படும் இடர்கால நிதி யான இரண்டாயிரம் ரூபாய் உதவித் தொகையானது நேற்றையதினம் அந்தந்தப் பிரதேச செயலரின் வழிநடத்தலின் கீழ் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த உதவித் தொகையானது தொடர்ச்சியாக யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவுள்ளது.

குறிப்பாக யாழ். மாவட்டத்தில் 36 ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு இடர்கால உதவித் தொகை வழங்குவதற்கு அனுமதி கிடைத்துள்ளதாகவும் தொடர்ச்சியாக இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-03,18,33,101)

# யாழ்ப்பாணத்தில் இருந்து 610 கிலோமீற்றர் தொலைவில்


## வங்காள விரிகுடாவில் நிலநடுக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து 610 கிலோ மீற்றர் தொலைவில் வங்காள விரிகுடா கடற்பரப்பில் 5.1 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

எனினும் இலங்கைக்கு பேரிடர் அச்சுறுத்தல் இல்லை என்று வானிலை ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கம் தொடர்பான பாதிப்பு இந்தியாவின் சென்னையிலும் பதிவாகியுள்ளது. (ம-03)




# 'டெல்டா' ஒரு நபரிடமிருந்து 8 பேருக்கு பரவும் அபாயம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

டெல்டா திரிபினால் ஏற்பட்டுள்ள கொரோனா அலையில், ஒருவரிடமிருந்து 8 பேருக்கு வைரஸ் பரவும் அபாயம் உள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில், சங்கத்தின் மத்தியகுழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினரான வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஆரம்பகாலத்தில் இந்த கோவிட் வைரஸானது ஒருவரிடமிருந்து 2-3 நபர்களுக்கு பரவக்கூடியதாக இருந்தது.

அதன் பின்னர் வந்த அல்பா திரிபானது ஒரு நபரிடமிருந்து 4-5 நபர்களுக்கு பரவக்கூடியதாக இருந்தது. தற்போது ஏற்பட்டுள்ள நான்காவது அலையில் டெல்டா திரிபினால் ஒரு நபரிடமிருந்து 8 பேருக்கு வைரஸ் பரவக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது.

இதேவேளை, முதலாவது அலையில் மரணவீதம் 0 க்கும் குறைவாகக் காணப்பட்டது. எனினும் தற்போது மரண வீதமானது 4 - 5 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

இதனூடாக தற்போதைய கோவிட் பரவலின் வீரியத்தை எம்மால் ஊகித்துக்கொள்ள முடியுமானதாக இருக்கும்.

மேலும் பல திரிபுகளால் இலங்கையில் ஐந்தாவது அலையொன்று ஏற்படுமாயின் அதிலிருந்து நாம் மீளுவது என்பது மிகக்கடினமானது.

உடல், உள ரீதியான பாதிப்புகளை போன்றே பொருளாதார ரீதியிலும் பாரிய நெருக்கடியை நாம் சந்திக்க நேரிடும்.

எனவே, பொதுமக்கள் தற்போதைய நிலைமையின் தீவிரத்தை அறிந்து செயற்படுமாறு அவர் மேலும் கோரியுள்ளார். (ம-03)

## மரண அறிவித்தல்



### பத்மாவதி வில்வராஜா

தோற்றம் - 31.07.1948 மறைவு - 24.08.2021

கன்னாதிட்டியைப் பிறப்பிடமாகவும் இல.6, செல்லர் வீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி வில்வராஜா நேற்று (24.08.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரை-தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வில்வராஜாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/ இந்துக் கல்லூரி) பாசமிகு மனைவியும் நந்தினி, பிரபாகர், மனோகர் மற்றும் காலஞ்சென்ற சுதாகர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற நற்குணராஜா, தனேஸ்வரி, சிந்துஜா, தயானி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பகவதி, லீலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் திவ்யா, பிரணவி, பிரவீன், நரேந்ரன், பிரணவன், சாம்பவி, திவ்யன், கபிநயன், சந்தோஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.08.2021) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (7807)

இல.6, செல்லர் வீதி,
நல்லூர்.

தகவல்:-
குடும்பத்தினர்

# இராஜாங்க அமைச்சர் ஜானக்க வாக்கும்புரவுக்கு கொரோனா தொற்று

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் ஜானக்க வாக்கும்புரவுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த அமைச்சரின் மகளுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து அவர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

இதையடுத்து அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் நாட்டில் இம்மாதத்தில் மாத்திரம் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட 8 ஆவது பாராளுமன்ற உறுப்பினர் இவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-03)

# பொலிஸாரால் கைது செய்யப்பட்டு உயிரிழந்த நபருக்கும் கொரோனா தொற்று

(கொழும்பு)

மத்துகம பொலிஸாரினால் கடந்த 22 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவர் பொலிஸ் நிலையம் நோக்கி அழைத்த வந்தபோது உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபரை பொலிஸ் நிலையம் நோக்கி அழைத்து வரும்போது அவருக்கு காய்ச்சல் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி, சந்கேநபரை வேன்தேவ வைத்தியசாலையில் அனுமதிக்க நடவடிக்கை எடுத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, சந்தேகநபரை பரிசோதித்த வைத்தியர் அவர் உயிரிழந்து விட்டதாகத் தெரிவித்துள்ளார்.

40 வயதுடைய சந்தேகநபரின் சடலத்தை பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அவருக்கு கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-03)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org